Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علیٰ رسوله الكريم وعلیٰ عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 44

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

12 ஸஃபர் 1439 ஹிஜ்ரி கமரி 2 நுபுவ்வத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

2 நவம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நமது இறைவன் எத்தகு வல்லமையுள்ளவனாக இருக்கின்றான். மேலும் நாம் எந்த அளவு நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றோம். அதாவது அவனது வார்த்தைகளான திருக்குர்ஆன் மீது நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். மேலும் இந்த அற்புதங்களை நிகழ்த்துகின்ற இறைவன் மீது நம்பிக்கை கொள்ளாத அம்மக்கள் எவ்வளவு துர்பாக்கியசாலிகளாக இருக்கின்றனர்?**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**என்பத்தி இரண்டாவது அடையாளம்:** பல முறை எனது நூல்களில் எழுதப்பட்டிருக்கின்ற إِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوْا مَا بِأَنْفُسِهِمْ إِنَّهٗ آوَى الْقَرْيَةَ அதாவது, இறைவன் இந்த பிளேக் நோயை, மக்கள் தங்கள் உள்ளங்களை மாற்றிக் கொள்ளாத வரை இந்த சமுதாயத்தை விட்டு அகற்ற மாட்டான். இறுதியில் இறைவன் இந்த கிராமத்தை தனது அடைக்கலத்தில் எடுத்துக் கொள்வான். மேலும், لَوْلَا الْإِكْرَامُ لَهَلَكَ الْمَقَامُ அதாவது, உமது கண்ணியத்தைக் கருத்தில் கொள்ளாமல் இருந்திருந்தால் இந்த முழு கிராமத்தையும் நான் அழித்திருப்பேன். அவர்களில் ஒருவரைக் கூட நான் விட்டு வைத்திருக்க மாட்டேன் என்று அந்த இறைவன் கூறியுள்ளான். மேலும், وَمَا كَانَ اللّٰهُ لِيُعَذِّبَهُمْ وَأَنْتَ فِيْهِمْ நீர் அவர்களுக்கு மத்தியில் இருக்கும் நிலையில் அவர்கள் அனைவரையும் இறைவன் தண்டனையினால் அழிக்கக் கூடியவன் அல்லன் என்று அவன் கூறியுள்ளான்.

நினைவில் கொள்ளுங்கள் ! إِنَّهٗ آوَى الْقَرْيَةَ என்ற இறைவனின் இந்த சொற்றொடரின் பொருள் இதுவாகும். அதாவது, மேலான இறைவன் ஓரளவு தண்டனைக்குப் பிறகு இந்த கிராமத்தை தனது அடைக்கலத்தில் எடுத்துக் கொள்வான்; ஒருபோதும் அதில் பிளேக் நோய் வராது என்று இதற்கு பொருள் அல்ல. ஒரு நபர் ஓரளவு துன்பத்திற்கு ஆளான பிறகு அமைதியில் வந்து விடுகின்ற அந்த அடைக்கலத்தை தருவதற்கே அரபி மொழியில் آوٰى என்ற சொல்லைக் கூறுகின்றனர். உதாரணமாக அல்லாஹ், أَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَآوٰى அதாவது இறைவன் உம்மை அநாதையாகக் கண்டான். எவரது ஆதரவும் இல்லாமல் துன்பங்களில் நீர் ஆழ்ந்திருப்பதைக் கண்டு அவன் உமக்கு அடைக்கலம் தந்தான் என்று கூறுகின்றான்.

இறைவன் இவ்வாறு கூறுகின்றான்: وَآوَيْنٰهُمَا إِلٰى رَبْوَةٍ ذَاتِ قَرَارٍ وَّمَعِيْنٍ அதாவது நாம் ஈஸாவுக்கும் அவரது தாயாருக்கும் யூதர்கள் அவர்கள் மீது அநீதியிழைத்த பிறகு, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைய அவர்கள் விரும்பியபோது நாம் அவ்விருவருக்கும் அடைக்கலம் தந்தோம். மேலும், எல்லா மலைகளையும் விட உயர்வாக இருக்கின்ற ஒரு மலையில் அவ்விருவரையும் சென்று சேர வைத்தோம். அதாவது, காஷ்மீரிலுள்ள மலையில் அவ்விருவரும் சென்று சேர்ந்தனர். இனிமையான தண்ணீரை உடைய வசதியான மற்றும் சுகத்தையும் நிம்மதியையும் தரக்கூடிய இடமாக அது இருந்தது. சூரா அல் கஃபில் இந்த வசனம் இருக்கின்றது. فَأْوُوْا إِلَى الْكَهْفِ يَنْشُرْ لَكُمْ رَبُّكُمْ مِّنْ رَّحْمَتِهٖ (அல் கஃப் பாகம் 15) அதாவது, குகையின் அடைக்கலத்தின்கீழ் வந்து விடுங்கள். இவ்வாறு இறைவன் தனது கருணையை உம்மீது பரப்பி விடுவான். அதாவது, நீங்கள் கொடுங்கோல் அரசனின் துன்பத்திலிருந்து இரட்சிப்பைப் பெற்று விடுவீர்கள் என்று இறைவன் கூறுகின்றான். சுருக்கமாக, ஒரு நபர் ஓரளவு துன்பத்திற்கு ஆளான பிறகு அமைதியில் நுழைந்து விடுகின்ற அந்த சந்தர்ப்பத்தில்தான் அரபியில் எப்போதும் آوٰى என்ற சொல் வருகின்றது. இதே முன்னறிவிப்பு காதியானைப் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றது. அதற்கேற்ப காதியானில் ஒருமுறை மட்டும் ஓரளவு கடுமையான முறையில் பிளேக் நோய் வந்தது. அதற்குப் பிறகு அது குறைந்து கொண்டே சென்றது. எதுவரையென்றால், இந்த வருடம் ஒருவர் கூட காதியானில் பிளேக் நோயினால் மரணிக்கவில்லை. ஆனால், அக்கம் பக்கத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் பிளேக் நோயால் மரணித்து விட்டனர்.

**என்பத்தி மூன்றாவது அடையாளம்:** ஒருமுறை நான் சிறிய பள்ளிவாயிலை (அதாவது முபாரக் பள்ளிவாயிலை) ஒட்டியிருந்த அதாவது, இறைவன் பைத்துல் ஃபிக்ர் என்று பெயர் வைத்திருந்த அந்த அறையில் அமர்ந்திருந்தேன். மேலும், எனக்கருகில் ஹாமிது அலி என்ற பெயரை உடைய எனது தொண்டர் ஒருவர் எனது கால்களை அமுக்கிக் கொண்டு இருந்தார். இந்த தருணத்தில் تَرٰى فَخِذًا أَلِيْمًا நீர் ஒரு வேதனையுள்ள தொடையை காண்பீர் என்று எனக்கு இல்ஹாம் வந்தது. இப்போது எனக்கு இந்த இல்ஹாம் வந்தது என்று நான் ஹாமிது அலியிடம் கூறினேன். அதற்கு அவர் உங்களது கையில் ஒரு சிறிய பரு ஒன்று இருக்கின்றது. ஒருவேளை இந்த இல்ஹாம் அதை சுட்டிக் காட்டக்கூடியதாக இருக்கலாம் என்று பதில் கூறினார். அதற்கு நான் அவரிடம் கை என்பதற்கும் தொடை என்பதற்கும் அதிக வித்தியாசம் இருக்கின்றது. உங்களது இந்த எண்ணம் வீணானதும் அறிவுக்கு பொருந்தாமலும் இருக்கின்றது. சிறு பருவினால் எந்த வலியும் ஏற்படுவதில்லை. நீர் அதனை காண்பீர் என்பதே இல்ஹாமின் பொருளாகும். இப்போது அதனை நீர் கண்டு கொண்டிருக்கின்றீர் என்பது அதன் பொருள் அல்ல என்று நான் அவரிடம் கூறினேன். பெரிய பள்ளிவாயிலில் (அக்ஸா பள்ளிவாயிலில்) சென்று தொழுவதற்கு அந்த அறையிலிருந்து நாங்கள் கீழே இறங்கி வந்தோம். கீழே இறங்கியதும் இரு குதிரைகளில் இருவர் சவாரி செய்தவாறு என் பக்கம் வருவதை நான் கண்டேன். இருவரும் இருக்கைகள் இல்லாத நிலையில் இரண்டு குதிரைகளில் சவாரி செய்தவாறு வந்தனர். இருபது வயதிற்கும் குறைவானவர்களாகவே இருவரும் இருந்தனர். அவர்களில் ஒருவர் மற்றொரு குதிரையில் சவாரி செய்து வந்தவர் எனது சகோதரர் ஆவார். அவருக்கு தொடையில் வலி இருப்பதன் காரணமாக அவர் கடுமையான நோய்க்கு ஆளாகியிருக்கின்றார். கடுமையான கவலைக்கு ஆளாகியுள்ளார். நீங்கள் அவருக்காக ஏதாவது ஒரு மருந்தைக் கூற வேண்டும். இதற்காகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம் என்று கூறினார். அப்போது நான் ஹாமிது அலியிடம் அல்ஹம்துலில்லாஹ் ! எனது இல்ஹாம் எந்த அளவு விரைவாக

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று அல்லாஹ்வின் அருளால் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் யூ.கே -வின் வருடாந்திர இஜ்திமா ஆரம்பமாகின்றது. இவ்வகையில் நான் அன்ஸார்களுக்கு மிகவும் முக்கியமான மற்றும் அடிப்படையான ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். அது தொழுகையாகும்.

தொழுகை ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவரின் மீதும் கடமையாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நாற்பது வயதிற்குப் பிறகு அல்லாஹ்வை வணங்குவது மற்றும் தொழுகையின் பக்கம் அதிக கவனம் உருவாக வேண்டும். நான் அல்லாஹ்வின் முன்பு ஆஜராக வேண்டிய அந்த நேரம் விரைவாக வந்து கொண்டிருக்கின்றது. அங்கு நமது ஒவ்வொரு செயலின் கணக்கு வழக்கு பார்க்கப்படும் என்ற உணர்வு உருவாக வேண்டும்.

தொழுவதன் பக்கம் அல்லாஹ் எப்போதெல்லாம் கவனமூட்டியிருக்கின்றானோ அப்போதெல்லாம் தொழுகையை முறையாக நிறைவேற்றுவதன் பக்கமும் எல்லா தொழுகைகளையும் அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது குறித்தும் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதைப் பற்றியும் நமக்கு கவனமூட்டியிருக்கின்றான். தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. தொழுகையை நிறைவேற்றுவது என்பதன் பொருளே தொழுகையை அதற்குரிய குறித்த நேரத்தில் நிறைவேற்றுவதும் ஜமாஅத்தாக தொழுவதும் ஆகும்.

அன்ஸாருல்லாஹ்விற்கு எல்லாவற்றையும் விட அதிகமாக குறிப்பாக இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, அவர்களது ஒவ்வோர் உறுப்பினரும் ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கமுடையவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாஸிரும் சுயமே தன்னை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நோய்வாய்ப்பட்டிருப்பது அல்லது வேறு தகுந்த காரணம் இல்லாத நிலையில், அவர் ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கமுடையவராக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதற்கு அனைவரும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். பக்கத்தில் பள்ளிவாயிலோ அல்லது தொழுகை சென்டரோ இல்லாமல் இருந்தால் அந்த பகுதியிலுள்ள சில மக்கள் ஏதாவது ஒரு வீட்டில் ஒன்று கூடி ஜமாஅத்தாக தொழ முடியும். இந்த வசதியும் இல்லையென்றால் வீட்டில் இருப்பவர்கள் ஒன்று சேர்ந்து வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழ வேண்டும். இதன் மூலம் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் தொழுகை மற்றும் ஜமாஅத்தாக தொழுவதன் முக்கியத்துவம் குறித்த உணர்வு ஏற்படும்.

அன்ஸாருல்லாஹ் அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநாட்டுவதிலும் அதற்கேற்ப செயல்படுவதிலும் பிறரை செயல்பட வைப்பதிலும் தமது பங்கை செலுத்தும்போதுதான் அவர்கள் உண்மையான அன்ஸாருல்லாஹ்வாக ஆக முடியும். மனிதப் படைப்பின் நோக்கமாக இருக்கின்ற அல்லாஹ்வை வணங்குவதை செய்யாமல் இருந்தால் மேலும் அதற்கேற்ப எவர்கள் கண்காணிப்பாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனரோ அவர்களிடம் அதை செய்ய வைக்காமல் இருந்தால் அல்லது செய்ய வைப்பதற்கு முயற்சி செய்யாமல் இருந்தால் இவ்விஷயத்தில் தங்களது முன்மாதிரியைக் காட்டாமல் இருந்தால் பிறகு அவர்கள் பெயரளவில் மட்டுமே அன்ஸாருல்லாஹ்வாக இருக்கின்றனர்.

ஒவ்வொரு நாஸிரும் குறிப்பாக தம்மை ஆய்வு செய்ய பார்க்க வேண்டும். அதாவது எந்த அளவு தொழுகையைப் பேணுபவராக அவர் இருக்கின்றார் என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். தங்களது குழந்தைகளின் முன்னால் எந்த அளவு அவர்கள் தங்களது முன்மாதிரியைக் காட்டுகின்றனர் என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவர்களது தொழுகையின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது? என்ன ஒரு கடமை அல்லது சுமை என்று மட்டும் கருதியவாறு தொழுகைகளை அவர் நிறைவேற்றுகின்றாரா? அல்லது உண்மையிலேயே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இவற்றையெல்லாம் அவர்கள் செய்கின்றனரா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகையின் முக்கியத்துவம், தொழுகை கடமையாக இருப்பது, அதிலுள்ள ஞானம், தொழுவதற்குரிய வழிமுறை, அதன் நோக்கம், அதிலுள்ள தத்துவம், தொழுகையின் நேரங்களில் உள்ள தத்துவம் ஆகியவற்றைப் பற்றி பல்வேறு கோணங்களில் பல்வேறு இடங்கள் மற்றும் சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள். அவர்களது சில மேற்கோள்களை இப்போது நான் எடுத்துக் கூறுவேன். அவை தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் அதிலுள்ள ஞானம் குறித்து ஒளியூட்டக்கூடியவையாக இருக்கின்றன.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 29 செப்டம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **29 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

இன்று அல்லாஹ்வின் அருளால் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் யூ.கே –வின் வருடாந்திர இஜ்திமா ஆரம்பமாகின்றது. இவ்வகையில் நான் அன்ஸார்களுக்கு மிகவும் முக்கியமான மற்றும் அடிப்படையான ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். அது தொழுகையாகும்.

தொழுகை ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவரின் மீதும் கடமையாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நாற்பது வயதிற்குப் பிறகு எனது வயது ஒவ்வொரு நாளும் அதிகமாகிக் கொண்டிருக்கும்போது எனது வாழ்க்கையின் நாட்கள் குறைந்து கொண்டே செல்கின்றன என்ற உணர்வு முன்னரை விட அதிகமாக உருவாக வேண்டும். அத்தகைய நிலைமையில் அல்லாஹ்வை வணங்குவது மற்றும் தொழுகையின் பக்கம் அதிக கவனம் உருவாக வேண்டும். நான் அல்லாஹ்வின் முன்பு ஆஜராக வேண்டிய அந்த நேரம் விரைவாக வந்து கொண்டிருக்கின்றது. அங்கு நமது ஒவ்வொரு செயலின் கணக்கு வழக்கு பார்க்கப்படும் என்ற உணர்வு உருவாக வேண்டும். அத்தகைய நிலைமையில் நம்பிக்கை கொண்டவருக்கும் மரணித்த பிறகுள்ள வாழ்க்கை மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கையுள்ள ஒவ்வொரு நபருக்கும் நாம் அல்லாஹ்விற்குரிய உரிமையையும் செலுத்த வேண்டும். அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும் என்ற கவலை இருக்க வேண்டும். நமது முயற்சிகளுக்கேற்ப இந்த உரிமைகளைச் செலுத்தும் நிலைமையில் நாம் இறைவன் முன்பு ஆஜராக வேண்டும். தொழுவதன் பக்கம் அல்லாஹ் எப்போதெல்லாம் கவனமூட்டியிருக்–கின்றானோ அப்போதெல்லாம் தொழுகையை முறையாக நிறைவேற்றுவதன் பக்கமும் எல்லா தொழுகைகளையும் அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது குறித்தும் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதைப் பற்றியும் நமக்கு கவனமூட்டியிருக்கின்றான். தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்ற கட்டளை

இருக்கின்றது. தொழுகையை நிறைவேற்றுவது என்பதன் பொருளே தொழுகையை அதற்குரிய குறித்த நேரத்தில் நிறைவேற்றுவதும் ஜமாஅத்தாக தொழுவதும் ஆகும். அன்ஸாருல்லாஹ்வை சார்ந்திருப்பவர்களும் தங்களது அறிக்கையில் ஆய்வு செய்து பார்த்திருப்பர். ஆய்வு செய்து பார்க்கவும் வேண்டும்.

நாம் பார்க்கும்போது தெரிய வருவது என்னவென்றால், அன்ஸார்களின் வயது ஒரு வலுவான உறுதிவாய்ந்த வயதாக இருக்கின்ற நிலையிலும் கூட ஜமாஅத்தாக தொழுவதன் பக்கம் எந்த அளவு கவனம் இருக்க வேண்டுமோ அந்த அளவு கவனம் ஏற்படவில்லை. எனவே, அன்ஸாருல்லாஹ் எல்லாவற்றையும் விட அதிகமாக குறிப்பாக இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, அவர்களது ஒவ்வோர் உறுப்பினரும் ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கமுடையவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாஸிரும் சுயமே தன்னை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நோய்வாய்ப்பட்டிருப்பது அல்லது வேறு தகுந்த காரணம் இல்லாத நிலையில், அவர் ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கமுடையவராக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதற்கு அனைவரும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். பக்கத்தில் பள்ளிவாயிலோ அல்லது தொழுகை சென்டரோ இல்லாமல் இருந்தால் அந்த பகுதியிலுள்ள சில மக்கள் ஏதாவது ஒரு வீட்டில் ஒன்று கூடி ஜமாஅத்தாக தொழ முடியும். இந்த வசதியும் இல்லையென்றால் வீட்டில் இருப்பவர்கள் ஒன்று சேர்ந்து வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழ வேண்டும். இதன் மூலம் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் தொழுகை மற்றும் ஜமாஅத்தாக தொழுவதன் முக்கியத்துவம் குறித்த உணர்வு ஏற்படும். எனவே, அன்ஸாருல்லாஹ் அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநாட்டுவதிலும் அதற்கேற்ப செயல்படுவதிலும் பிறரை செயல்பட வைப்பதிலும் தமது பங்கை செலுத்தும்போதுதான் அவர்கள் உண்மையான அன்ஸாருல்லாஹ்வாக ஆக முடியும். மனித படைப்பின் நோக்கமாக இருக்கின்ற அல்லாஹ்வை வணங்குவதை செய்யாமல் இருந்தால் மேலும் அதற்கேற்ப எவர்கள் கண்காணிப்பாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனரோ அவர்களிடம் அதை செய்ய வைக்காமல் இருந்தால் அல்லது செய்ய வைப்பதற்கு முயற்சி செய்யாமல் இருந்தால் இவ்விஷயத்தில் தங்களது முன்மாதிரியைக் காட்டாமல் இருந்தால் பிறகு அவர்கள் பெயரளவில் மட்டுமே அன்ஸாருல்லாஹ்வாக இருக்கின்றனர். இன்று வாள் மற்றும் அம்புகளாலான போர் நடைபெறவில்லை. அதற்காக உதவியாளர்கள் தேவையில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நாம் வெற்றி பெறுவதற்குரிய ஆயுதம் துஆவாகும் என்று கூறியுள்ளார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 28; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, அன்ஸாருல்லாஹ்வாக ஆவதற்கு இந்த துஆவின் ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்காக அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைக்கேற்ப இந்த ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இது நடக்கும் போதுதான் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருப்பதற்கான சரியான உரிமையைச் செலுத்துபவர்களாக ஆவோம். நீங்கள் நான் கூறுவதை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால், உங்களிடம் தூய மாற்றங்களை ஏற்படுத்தாமல் இருந்தால், உங்களது இறை வணக்கத்திற்குரிய உரிமையைச் செலுத்தாமல் இருந்தால் பிறகு என்னிடம் நீங்கள் பைஅத் செய்ததனால் எந்தப் பலனும் உங்களுக்கு இல்லை என்றே அவர்கள் மீண்டும் மீண்டும் கூறியுள்ளார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 140; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இவ்வகையில் ஒவ்வொரு நாஸிரும் குறிப்பாக தம்மை ஆய்வு செய்ய பார்க்க வேண்டும்.

அதாவது எந்த அளவு தொழுகையைப் பேணுபவராக அவர் இருக்கின்றார் என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். தங்களது குழந்தைகளின் முன்னால் எந்த அளவு அவர்கள் தங்களது முன்மாதிரியைக் காட்டுகின்றனர் என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவர்களது தொழுகையின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது? என்ன ஒரு கடமை அல்லது சுமை என்று மட்டும் கருதியவாறு தொழுகைகளை அவர்கள் நிறைவேற்றுகின்றாரா? அல்லது உண்மையிலேயே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இவற்றையெல்லாம் அவர்கள் செய்கின்றனரா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகையின் முக்கியத்துவம், தொழுகை கடமையாக இருப்பது, அதிலுள்ள ஞானம், தொழுவதற்குரிய வழிமுறை, அதன் நோக்கம், அதிலுள்ள தத்துவம், தொழுகையின் நேரங்களில் உள்ள தத்துவம் ஆகியவற்றைப் பற்றி பல்வேறு கோணங்களில் பல்வேறு இடங்கள் மற்றும் சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள். அவர்களது சில மேற்கோள்களை இப்போது நான் எடுத்துக் கூறுவேன். அவை தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் அதிலுள்ள ஞானம் குறித்து ஒளியூட்டக் கூடியவையாக இருக்கின்றன.

தொழுகையை முறையாகவும் விடாமலும் தொழுவதைப் பற்றி ஒரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சபையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

தொழுகைகளை முறையாகவும் விடாமலும் தொழுது வாருங்கள். சில மக்கள் ஒரு நேரத் தொழுகையை மட்டும் தொழுகின்றனர். தொழுகைகள் மன்னிக்கப்படுவதில்லை என்பதை அவர்கள் நினைவில் வைக்க வேண்டும். எதுவரையென்றால் இறை தூதர்களுக்கும் கூட அவை மன்னிக்கப்படவில்லை. ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு புதிய ஜமாஅத் வந்தது. அவர்கள் தொழுகையை மன்னித்து விடுமாறு வேண்டினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த மதத்தில் செயல் இல்லையோ அது மதமே அல்ல என்று கூறினார்கள். எனவே இந்த விஷயத்தை நன்றாக நினைவில் வையுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப நீங்கள் செயல்படுங்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ்வின் அடையாளங்களில் இதுவும் ஓர் அடையாமாகும். அதாவது வானமும் பூமியும் அவனது கட்டளையினாலேயே நிலைத்திருக்க முடியும். சில நேரங்களில் எவர்களது இயல்பு இயற்கையான விஷயங்களின் பக்கம் சாய்ந்திருக்கின்றதோ அவர்கள் இயற்கைவாதிகளின் மதம் பின்பற்றத் தகுந்ததாகும். ஏனென்றால் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்குரிய வழிமுறைகளுக்கேற்ப செயல்படாமல் இருந்தால் பிறகு இறையச்சம் மற்றும் தூய்மையைப் பேணுவதால் என்ன பயன் ஏற்படப் போகின்றது? என்று அவர்கள் கேட்கின்றனர். இத்தகைய தத்துவங்களை மக்கள் தானாகவே ஏற்படுத்தியுள்ளனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அடையாளங்களில் இதுவும் ஓர் அடையாளமாகும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். அதாவது சில நேரங்களில் மருந்துகள் பயனளிக்காமல் இருந்து விடுகின்றன. ஆரோக்கியத்தைப் பாதுகாக்கின்ற காரணிகள் எதற்கும் உதவாமல் இருந்து விடுகின்றன. மருந்தும் பயன் தராமல் இருந்து விடுகின்றது. திறமை பெற்ற மருத்துவராலும் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால் அல்லாஹ்வின் கட்டளை இருந்தால் தலைகீழாக இருக்கின்ற ஒருவனும் நேராக நிற்க ஆரம்பித்து விடுகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 283; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இதற்கு அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். அதற்குரிய சிறந்த வழி இறைவனை வணங்குவதாகும். இறை வணக்கத்தின் சரியான நிலை தொழுகையை நிறைவேற்றுவதாகும்.

தொழுகையின் உண்மை நிலை, அதன் முக்கியத்துவம் மனிதனுக்கு அதன் தேவை தொழுகையின் நிலை எவ்வாறு இருக்க வேண்டும் ஆகிய இந்த விஷயங்களை விளக்கியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "தொழுகை என்றால் என்ன? அது ஒரு சிறப்பான துஆவாகும். ஆனால் மக்கள் அதை அரசர்களின் வரி ஆகக் கருதுகின்றனர். இறைவனுக்கு இந்த விஷயங்களின் தேவை என்ன வந்து விட்டது என்பதைக் கூட இந்த அறிவீனர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சுயமே தன்னிறைவு பெற்றவனாகத் திகழ்கின்ற அவனுக்கு இவ்விஷயங்களின் என்ன தேவை இருக்கின்றது? அதாவது மனிதன் துஆ, தஸ்பீஹ் மற்றும் தஹ்லீலில் ஈடுபட வேண்டும் என்று அவனுக்கு என்ன தேவை இருக்கின்றது? மாறாக, இதில் சுயமே மனிதனுக்கு தான் பலன் இருக்கின்றது. அவன் இந்த வழிமுறை மூலமாக தனது நோக்கத்தை அடைந்து விடுகின்றான்." தொழுகையின் மூலமாக அவனது தேவைகள் நிறைவேறுகின்றன. அதனால் அவனது வாழ்வின் நோக்கம் நிறைவேறி விடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: "எனக்கு இதைப் பார்த்து மிகவும் வருத்தம் ஏற்படுகின்றது.

இன்றைய நாட்களில் இறைவணக்கங்கள், தக்வா மற்றும் மார்க்கப் பற்று ஆகியவற்றின் மீது நேசம் இல்லாத நிலை இருக்கின்றது. இதற்கான காரணம் பொதுவாகக் காணப்படுகின்ற விஷத்தின் தாக்கத்தைக் கொண்ட சடங்காகும். இதன் காரணமாகவே அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு குளிர்ந்து விட்டது.'' இறைவணக்கங்களின் எவ்வகையிலான இன்பம் கிடைக்க வேண்டுமோ அந்த இன்பம் கிடைக்கவில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''உலகில் அல்லாஹ் ஓர் இன்பத்தையும் சுவையையும் வைக்காத எந்த ஒரு பொருளும் இல்லை. (ஒவ்வொரு பொருளிலும் அவன் ஓர் இன்பத்தை வைத்திருக்கின்றான்.) எவ்வாறு ஒரு நோயாளி ஒரு சிறந்த சுவையுள்ள பொருளிலிருந்து இன்பத்தைப் பெற முடியாதோ, மேலும் அதனை அவர் முற்றிலும் கசப்பானதாகக் கருதுவாரோ அதாவது நோயாளியின் நாவுக்கு சுவை தெரியாமல் போய் விட்டால் எந்த பொருளிலிருந்தும் அவர்கள் இன்பத்தைப் பெற முடியாது.''

அவர்கள் கூறுகின்றார்கள்: ''மேலும் அதனை அவர் முற்றிலும் கசப்பானதாகக் கருதுவாரோ அவ்வாறே இறைவனை வணங்குவதில் எவர்களுக்கு இன்பமும் சுவையும் கிடைக்கவில்லையோ அவர்கள் தங்களுக்கு இருக்கின்ற நோயைப் பற்றி கவலைப்பட வேண்டும்.'' எவர்களுக்கு தொழுகையில் இன்பம் கிடைக்கவில்லையோ அவர்கள் நோயாளியாக இருக்கின்றனர் என்றே அதற்கு பொருளாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஏனென்றால், இப்போது நான் கூறியது போன்றே உலகில் அல்லாஹ் ஏதாவதொரு இன்பத்தை வைக்காத எந்தவொரு பொருளும் இல்லை. அல்லாஹ் மனித இனத்தை தன்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளான். அவ்வாறிருக்கும்போது அந்த இறை வணக்கத்தில் அவனுக்கு ஓர் இன்பமும் ஆனந்தமும் இல்லாமல் இருப்பதற்கு காரணம் என்ன? இன்பமும் ஆனந்தமும் அதில் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் அந்த இன்பத்தைப் பெறக் கூடியவர்கள் எவராவது இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: (51:57) وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنَ மனிதன் இறை வணக்கத்திற்காகவே படைக்கப்பட்டிருக்கும் போது பிறகு இன்பமும் ஆனந்தமும் முழுமையாக அதில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இறை வணக்கத்தில் மிக உயரிய இன்பமும் ஆனந்தமும் இருக்க வேண்டும். அது அல்லாமல் அல்லாஹ் மனிதனைப் படைத்து விட்டு அவனுக்கு எந்த நோக்கமும் இல்லாமல் இருக்க முடியாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''நாம் இந்த விஷயத்தை அன்றாடம் நாம் பார்க்கின்ற விஷயங்களிலிருந்தும் நமது அனுபவங்களிலிருந்தும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். உதாரணமாக பாருங்கள். தானியங்கள், உண்கின்ற மற்றும் குடிக்கின்ற பொருள்கள் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளன. (சாப்பிடுவதற்கும், குடிப்பதற்குமுள்ள பொருள்கள் மனிதனுக்காக உருவாக்கப்பட்டிருக்கின்றன.) அதிலிருந்து அவன் ஓர் இன்பத்தையும் சுவையையும் பெறுவதில்லையா? இந்த சுவையையும், இன்பத்தையும், உணர்வையும் பெற்றுக் கொள்வதற்கு அவனது வாயில் நாவு இல்லையா என்ன? அந்த மனிதன் அழகான பொருள்களைப் பார்த்து அவை செடி கொடிகளாக இருந்தாலும் சரி அல்லது அசைவற்றிருக்கின்ற பொருள்களாக இருந்தாலும் சரி அதாவது செடி, பழங்கள், மலைகள் போன்றவையாக இருந்தாலும் சரி, விலங்குகளாக இருந்தாலும் அல்லது மனிதனாக இருந்தாலும் அவற்றைப் பார்த்து அவன் ஓர் இன்பத்தை பெறுவதில்லையா? நிச்சயமாக அவன் அதிலிருந்து இன்பத்தைப் பெறுகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: உள்ளத்தை மகிழ்விக்கின்ற இனிமையான குரலைக் கேட்டு அவனது காது இன்பத்தைப் பெறுவதில்லையா? பிறகு இறை வணக்கங்களில் இன்பம் இல்லை என்பதை மறுக்கும் விதத்தில் வேறு என்ன ஆதாரங்கள் தேவைப்படுகின்றது?

தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் ஆணையும், பெண்ணையும் ஜோடியாக படைத்துள்ளோம் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆணுக்கு (பெண்களின் மீது) ஒரு விருப்பத்தை அவன் வைத்துள்ளான். இதில் எவ்வகையிலும் அவன் நிர்ப்பந்திக்கவில்லை. மாறாக, அதில் அவனுக்கு ஓர் இன்பத்தைக் காட்டியுள்ளான். சந்ததிகளைப் பெறுவது மட்டுமே நோக்கமாக இருந்திருந்தால் அவனது குறிக்கோள் நிறைவேறாது.

அன்னார் கூறுகின்றார்கள்: நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இறைவணக்கமும் கூட ஒரு சுமையோ அல்லது வரியோ அல்ல. இதிலும் கூட ஓர் இன்பமும் ஆனந்தமும் உலகிலுள்ள எல்லா இன்பங்களை விடவும், ஆன்மாவிற்கு இன்பத்தைத் தரக்கூடிய எல்லா விஷயங்களை விடவும் உயர்ந்ததும் மேலானதுமாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வாறு ஒரு நோயாளி ஒரு சிறந்த நல்ல சுவையுள்ள உணவிலுள்ள இன்பத்தைப் பெற முடியாமல் இருக்கின்றாரோ முற்றிலும் அவ்வாறே இறைவனை வணங்குவதில் இன்பத்தைப் பெறாத அந்த பேரிழந்த மனிதனும் இருக்கின்றான். (மல்.'.பூஸாத் தொகுதி 1 பக்கம் 159-160; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தாமல் தொழுகையில் இன்பம் கிடைக்காமல் இருந்து அல்லாஹ்வின் அருள்களிலிருந்து விலகியிருப்பது மனிதனின் பலவீனமாகும். எனவே, நம்மில் எவர் அவ்வாறு இருந்தாலும் அவர் அது குறித்து கவலைப்பட வேண்டும்.

பிறகு உண்மையான தொழுகை எவ்வாறு இருக்கின்றது? எவ்வாறு இருக்க வேண்டும்? இதனை விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். இந்த தொழுகை எத்தகையது என்றால் இதன் மூலம் உலகமும சரியாகி விடுகின்றது. மார்க்கமும் சரியாகி விடுகின்றது. ஆனால் தொழுகின்ற பெரும்பாலான மக்கள் மீது தொழுகை சாபமிடுகின்றது. இது பற்றி அல்லாஹ் فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ۙ الَّذِيْنَ هُمْ عَنْ صَلَاتِهِمْ سَاهُوْنَ ۙ தொழுகையின் உண்மை நிலை பற்றி தெரியாத அந்த தொழுகையாளிகள் மீது சாபம் உண்டாகட்டும் என்று கூறுகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகை எத்தகையது என்றால் தொழுவதன் மூலமாக மனிதன் எல்லா வகையான தீய செயல்கள் மற்றும் வெட்கங் கெட்ட செயல்களிலிருந்தும் காப்பாற்றப்படுகின்றான். இத்தகைய தொழுகையை நிறைவேற்றுவதுகூட மனிதனது கையில் இல்லை. இறைவனது ஆதரவும் உதவியும் இல்லாமல் இந்த வழிமுறையைப் பெற முடியாது. மனிதன் துஆக்கள் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்காத வரை இத்தகைய உருக்கமும் பணிவுடன் மன்றாடுகின்ற நிலையும் உருவாக முடியாது. தொழுகையின் மூலம் எல்லா தீமைகளிலிருந்தும் தவிர்ந்திருக்கின்ற அந்த உயர் தகுதியைப் பெறுவதற்கு ஒரு முயற்சி தேவைப்படுகின்றது. அல்லாஹ்வின் அருள்களைப் பெற வேண்டிது அவசியமானதாக இருக்கின்றது. அதற்கு உருக்கமும் பணிவுடன் மன்றாடுகின்ற நிலையும் தேவைபடுகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே, உங்களது பகலும், இரவும் சுருக்கமாகக் கூறுவதென்றால், உங்களது எந்தவொரு நொடிப்பொழுதும் துஆக்களிலிருந்து விலகி இருக்கக் கூடாது. (மல்.'.பூஸாத் தொகுதி 10 பக்கம் 66-69; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, தொழுகையில் இன்பத்தையும் ஆனந்தத்தையும் பெறுவதற்கு அல்லாஹ்வின் அருள்களைப் பெற வேண்டியது அவசியமானதாகும். பிறகு அல்லாஹ்வின் அருள்களைக் கேட்பதற்கு மீண்டும் அவனுக்கு முன்னால் குனிய

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

வேண்டியது அவசியமானதாகும். இங்குமங்கும் நடக்கும்போது கூட அவனை நினைவு கூர்வது அவசியமானதாகும். மேலும் உருக்கம் ஏற்படும் நிலைமையைக் கேட்டு பெற வேண்டியது அவசியமானதாகும். இந்த நிலைமையை மனிதன் உருவாக்கினால் பிறகு அவனுக்கு தொழுகைகளில் இன்பம் கிடைக்கின்றது.

பிறகு தொழுகையில் இன்பம் கிடைக்காமல் இருப்பதற்கான காரணத்தையும் அதற்காக சிகிச்சையையும் பற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் பார்க்கின்றேன். மக்கள் தொழுகையில் கவனமற்றவர்களாகவும் சோம்பேறித்தனத்தைக் காட்டுபவர்களாகவும் இருப்பதற்குக் காரணம் தொழுகையில் அல்லாஹ் வைத்திருக்கின்ற அந்த இன்பம் மற்றும் ஆனந்தத்தைப் பற்றி அவர்களுக்கு தெரியவில்லை. இதுதான் பெரும் காரணமாக இருக்கின்றது. பிறகு நகரங்களிலும் கிராமங்களிலும் மேலும் அதிகமாக சோம்பேறித்தனமும் கவனமின்மையும் இருக்கின்றது. மக்கள் அதிகமாக குடியேறியுள்ள இடங்களில் வசிக்கின்ற மக்கள் அதிகமாக பணிகளில் ஈடுபடுகின்றனர். தனது பணிகளின் காரணமாக இன்னும் அதிகமாக அவர்கள் சோம்பேறிகளாக ஆகி விடுகின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களில் 50 சதவிகிதம் பேர் கூட தனது உண்மையான எஜமானனுக்கு முன்னால் முழுமையான ஈடுபாட்டுடனும் உண்மையான அன்புடனும் தலை குனிவதில்லை. பிறகு அவர்களுக்கு ஏன் இந்த இன்பத்தைப் பற்றி தெரியவில்லை? என்ற கேள்வியே எழுகின்றது. மேலும் ஒருபோதும் அவர்கள் இந்த இன்பத்தை சுவைத்துப் பார்த்ததில்லை. மற்ற மதங்களில் முறையாக இறைவணக்கம் செய்வது பற்றி இதுபோன்ற கட்டளைகள் இல்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில நேரம் இவ்வாறும் நிகழ்கின்றது. நாம் நமது பணிகளில் மூழ்கியிருக்கின்றோம். அப்போது பாங்கு சொல்பவர் பாங்கு சொல்கின்றார். அதை கேட்பதற்குக் கூட அம்மக்கள் விரும்புவதில்லை. ஒருவகையில் இதனால் அவர்களது உள்ளத்தில் துக்கம் ஏற்படுகின்றது. இத்தகைய மக்கள் மிகவும் கருணை காட்டப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். பாங்கு சொல்லப்படுவதையும் இவர்கள் செவிமடுப்பதில்லை. அல்லது தொழுகைக்கான நேரம் வந்த பிறகும் கூட தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இத்தகைய மக்கள் மிகவும் கருணை காட்டுவதற்குத் தகுதியுடையவர்களாக உள்ளனர். அவர்களது சபையில் அமர்ந்திருந்த சிலரைப் பற்றி அன்னார் கூறினார்கள்: இங்கும் அப்படிப்பட்டவர்கள் இருக்கின்றனர். அவர்களது கடைகள் பள்ளிவாயிலுக்குக் கீழே இருக்கின்றது. ஆனால், ஒருபோதும் பள்ளிவாயிலுக்குச் சென்று அவர்கள் நிற்பது கூட இல்லை. அதாவது தொழுவதற்காக அவர்கள் செல்வதில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே, நான் இதை கூற விரும்புகின்றேன். இறைவனிடம் மிகவும் அதிகமான உணர்வுடனும் உருக்கத்துடனும் துஆ செய்ய வேண்டும். அதாவது எவ்வாறு அவன் பழங்கள் மற்றும் பல வகையான பொருள்களின் மூலம் இன்பத்தை வழங்கினானோ அதுபோன்று தொழுகை மற்றும் இறை வணக்கத்திலும் கூட ஒரு முறையாவது அதிலுள்ள சுவையைச் சுவைக்குமாறு செய்ய வேண்டும். மனிதன் சாப்பிட்டது அவனுக்கு நினைவில் இருக்கின்றது. பாருங்கள். ஒரு நபர் அழகிய தோற்றமுள்ள ஒருவரை மகிழ்ச்சியுடன் பார்க்கும்போது அது அவருக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. பிறகு வெறுக்கத்தக்க தீய தோற்றத்திலுள்ள உடல் வடிவத்தைப் பெற்றுள்ள ஒருவரைப் பார்க்கும் போது அவரது எல்லா நிலைமைகளும் உருப்பெற்று அவரது கண்களுக்கு முன்னால் வந்து விடுகின்றது. ஆனால், இவர்களோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்தால் எதுவுமே நினைவில் இருப்பதில்லை. அழகிய தோற்றமும் தீய தோற்றமும் மனிதனுக்கு நினைவில் இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் மனிதன் அதனை கவனமாகப் பார்க்கின்றான். ஆனால் அவற்றுடன் அவனுக்கு தொடர்பு இல்லாமல் இருந்தால் பிறகு அவனுக்கு எதுவுமே நினைவில் இருப்பதில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வாறே தொழாமல் இருப்பவர்களின் பார்வையில் தொழுகை ஒரு வரி ஆகும். தேவையில்லாமல் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நேரத்தில் உளூ செய்து சுகமான தூக்கத்தை விட்டு விட்டு பல வகையிலுள்ள சுகங்களையும் இன்பங்களையும் இழந்து விட்டு தொழுகையை நிறைவேற்ற வேண்டியதிருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அசல் விஷயம் என்னவென்றால் தொழுகையை விட்டு விலகி அதை பொருட்படுத்தாமல் அவர் இருக்கும்போது அவரால் அதை புரிய முடியாது. தொழுகையிலுள்ள இன்பத்தையும் ஆனந்தத்தையும் பற்றி அவருக்கு எதுவும் தெரியாது. அவ்வாறிருக்கும்போது தொழுகையில் அவருக்கு எப்படி இன்பம் கிடைக்க முடியும்? நான் பார்க்கின்றேன். ஒரு குடிகாரனுக்கு போதையிலுள்ள மனிதனுக்கு அதில் ஓர் இன்பம் கிடைக்காத வரை அவர் ஒன்றன்பின் ஒன்றாக குவளைகளில் உள்ள மதுவைக் குடித்துக் கொண்டே இருக்கின்றார். எதுவரையென்றால், அவனுக்கு அதில் ஒரு வகையான போதை ஏற்பட்டு விடுகின்றது. அறிவுள்ள நல்ல மனிதன் இதிலிருந்து பயன் பெற முடியும். அதாவது தொழுகையை நிரந்தரமாகப் பேண வேண்டும். அந்த இன்பம் கிடைக்கின்ற வரை அவர் தொழுது கொண்டேயிருக்க வேண்டும். **அல்லாஹ்விடம் துஆ கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்வே! நீ மற்ற பொருள்களில் வைத்துள்ள அந்த இன்பத்தையும் சுவையையும் தொழுகையில் எனக்கு தந்தருள்வாயாக என்று துஆ செய்ய வேண்டும்.**

அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகையை நிரந்தரமாகப் பேண வேண்டும் தொழுது கொண்டேயிருக்க வேண்டும். எதுவரையென்றால், அதில் அவருக்கு இன்பம் கிடைக்க வேண்டும். எவ்வாறு குடிகாரனின் மூளையில் ஓர் இன்பம் இருக்கின்றதோ மேலும் அதைப் பெறுவது அவனது குறிக்கோளாக இருக்கின்றதோ இவ்வாறே மூளையில் மற்ற எல்லா ஆற்றல்களின் கவனமும் தொழுகையில் அவர் இன்பத்தைப் பெற வேண்டும் என்பதற்காக இருக்க வேண்டும். நான் தொழுகையில் இன்பத்தைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் தனது முழு ஆற்றல்களையும் அவர் இவ்வழியில் பயன்படுத்த வேண்டும்.

பிறகு கலப்பற்ற தன்மையுடனும் உணர்வுடனும் குறைந்தபட்சம் போதையில் இருக்கின்ற அந்த நபரது அமைதியற்ற தன்மையையும் துடிப்பையும் போன்று தொழுகையில் இன்பத்தைப் பெறுவதற்கு ஒரு துஆ உருவாக வேண்டும். அவ்வாறு உருவானால் பிறகு நான் கூறுகின்றேன். உண்மையாகவே கூறுகின்றேன். நிச்சயமாக உறுதியாக அந்த இன்பம் அவருக்கு கிடைத்து விடும். பிறகு தொழுகின்றபோது தொழுகையினால் கிடைக்கக் கூடிய பலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். நன்மைகள் செய்வதை கவனத்தில் வைத்திருக்க வேண்டும். (11:115) إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ அதாவது, நன்மைகள் தீமைகளை அழித்து விடுகின்றன என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்த நன்மைகளையும் இன்பங்களையும் உள்ளத்தில் வைத்தவாறு உண்மையாளர்களுக்கும் நன்மை புரிந்தோருக்கும் கிடைத்த அந்த தொழுகை கிடைக்க வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். (11:115) إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ அதாவது நன்மைகள் அல்லது தொழுகை தீமைகளை

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS
All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

அகற்றி விடுகின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது அல்லது இன்னோரிடத்தில் தொழுகை வெட்கக்கேடான செயல்களிலிருந்தும் தீமைகளிலிருந்து ஒருவரை காப்பாற்றுகின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் சில மக்கள் தொழுபவர்களாக இருந்தும் கூட தீமைகளைச் செய்வதை நாம் பார்க்கின்றோம். இதற்கான பதில் என்னவென்றால், அவர்கள் தொழுதாலும் தொழுகையின் ஆன்மாவுடனும் உண்மையுடனும் அவர்கள் தொழவில்லை. அவர்களின் தொழுகைகளில் அதன் ஆன்மா இருப்பதில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் வெறுமனே ஒரு சடங்கு என்ற ரீதியில் அல்லது தங்களது பழக்கத்திற்கேற்ப குனிந்து நிமிர்கின்றனர். அவர்களது ஆன்மா மரணித்து விட்டது. அல்லாஹ் அவற்றிற்கு 'ஹஸனாத்' என்று பெயர் வைக்கவில்லை. இங்கு 'அஸ்ஸலாத்' என்ற சொல்லை வைக்காமல் 'ஹஸனாத்' என்ற சொல் வைக்கப்பட்டிருக்கின்றது. இரண்டிற்கும் ஒரே பொருள் இருந்தும் கூட 'அஸ்ஸலாத்' என்ற சொல்லை வைக்காமல் இருந்ததற்குக் காரணம் அதன் மூலம் தொழுகையின் சிறப்பு மற்றும் அதன் அழகையும் சுட்டிக் காட்ட வேண்டும் என்பதற்காகவே ஆகும். அதாவது உண்மையின் ஆன்மாவை தன்னகத்தே கொண்டிருக்கின்ற தொழுகை தீமைகளை அகற்றுகின்றது. மேலும் அருள்களின் தாக்கம் அதில் இருக்கின்றது. தொழுகை நிச்சயமாக உறுதியாக தீமைகளை அகற்றுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகை உட்கார்ந்து எழுவதன் பெயர் அல்ல. தொழுகையின் சத்தும் ஆன்மாவும் துஆவாகும். அது ஓர் இன்பத்தையும் ஆனந்தத்தையும் தனக்குள் வைத்திருக்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 162-164; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

தொழுகையின் ஆன்மாவையும் அதன் குறிக்கோளையும் பெறுவதற்கு எவ்வாறு முயற்சி செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி மேலும் தொழுகையிலுள்ள பல்வேறு நிலைகள் அதாவது ருகூ, ஸஜ்தா, உட்கார்வது போன்ற நிலைகள் தொழுகையின் அந்த குறிக்கோளையும் ஆன்மாவையும் பெறுவதற்காகவே வைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகையிலுள்ள பல்வேறு நிலைகள் உண்மையில் ஆன்மீக நிற்றலாகவும் அமர்வதாகவும் இருக்கின்றது. மனிதனுக்கு இறைவனுக்கு முன்னால் நிற்க வேண்டியது வருகின்றது. நிற்பதும் கூட தொண்டு செய்பவர்கள் வெளிப்படுத்தும் மரியாதையாகும். தொண்டு செய்கின்ற மக்கள் ஒரு பெரிய மனிதரிடம் செல்லும்போது மரியாதை நிமித்தமாக எழுந்து நிற்கின்றனர். எனவே, தொழுகையில் நிற்பது மரியாதை செலுத்துவதன் அடையாளமாக இருக்கின்றது.

இரண்டாவது பகுதியான ருகூ என்பது கட்டளையை நிறைவேற்றுவதற்காக அவர் எந்த அளவு தனது கழுத்தை குனிய வைக்கின்றார் என்பதைக் கூறுகின்றது. ஸஜ்தா என்பது இறை வணக்கத்தின் குறிக்கோளாக இருக்கிற முழுமையான மரியாதை மற்றும் முழுமையான பணிவு மற்றும் தாழ்மைக் குணத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. மனிதன் ஸஜ்தா செய்யும்போது தன்னை பணிவு, தாழ்மைக்குணம் ஆகியவற்றின் உச்சத்திற்குக் கொண்டு செல்கின்றான். இதுவே இறை வணக்கத்தின் குறிக்கோளாக இருக்கின்றது. நான் இறைவனுக்கு முன்னால் தலை குனிகின்றேன் என்று அவர் கருதுகின்றார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த மரியாதைகளை இறைவன் அவனை நினைவு கூர்வதற்காக நியமித்திருக்கின்றான். உடலை ஆன்மீக வழிமுறைகளில் பங்கு பெற வைப்பதற்காக இறைவன் இவற்றை நியமித்துள்ளான். எவ்வாறு வெளிப்படையான முறையில் மனிதன் இந்த மரியாதைகளை வெளிப்படுத்துகின்றானோ அவ்வாறே அவனது ஆன்மாவும் இந்த மரியாதைகளை வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறே அவனது நிற்றலும் ருகூவும் ஸஜ்தாவும் இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதை தவிர அகத்தைச் சார்ந்துள்ள வழிமுறைகளை நிரூபிப்பதற்காக சில வெளிப்படையான வழிமுறைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. உட்புற மற்றும் அகத்தைச் சார்ந்துள்ள வழிமுறைகளின் பிம்பமாக இருக்கின்ற வெளிப்படையான வழிமுறைகளாவது காப்பி அடிப்பவரைப் போன்று இதனை செய்வதாக இருந்தால் அதாவது வெறுமனே கை கட்டுவது, ருகூவில் செல்வது, ஸஜ்தாவில் வீழ்வது, அமர்வது ஆகியவற்றை ஒருவரை காப்பி அடிப்பது போன்று அப்படியே செய்வதாக இருந்தால் பிறகு அவற்றை ஒரு பெரும் சுமையாகக் கருதி இறக்கி வைத்து அதை தூர எறிவதற்கு முயற்சி செய்வதாக இருந்தால், பிறகு அதில் என்ன சுகமும் இன்பமும் கிடைக்கும் என்பதை நீங்களே கூறுங்கள். அதில் இன்பமும் ஆனந்தமும் கிடைக்காத வரை அதன் உண்மை நிலை எவ்வாறு உண்மை என்று நிரூபிக்கப்படும்? தொழுகையில் இன்பம் கிடைக்காத வரை தொழுகையின் உண்மை நிலை என்ன? என்பது பற்றி அவருக்கு தெரிய முடியாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆன்மாவும் முழுமையான பணிவுடனும் தாழ்மையுடனும் இறைவன் முன்னிலையில் விழும்போதுதான் இந்த நிலை உருவாக முடியும். எனவே, உடல் ஸஜ்தாவில் வீழ்வது போன்றே ஆன்மாவும் ஸஜ்தா செய்ய வேண்டும். அல்லாஹ்வின் முன்னிலையில் விழ வேண்டும். நாவு எதை கூறுகிறதோ அதை ஆன்மாவும் கூற வேண்டும். நாவால் கூறப்படுகின்ற சொற்கள் உள்ளத்திலிருந்து வரக் கூடியவையாக இருக்க வேண்டும். அந்த நேரத்தில் ஓர் ஆனந்தமும், ஒளியும், நிம்மதியும் கிடைக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இதனை இன்னும் தெளிவாக எழுத விரும்புகின்றேன். மனிதன் எந்த அளவு படித்தரங்களைக் கடந்து மனிதனாக ஆகின்றானென்றால் முதலில் அவன் ஒரு விந்து துளியாக இருந்தான். அதற்கும் முன்னர் விந்து துளியின் பல பகுதிகளாக இருந்தான். அதாவது பல்வேறு வகையான உணவுப் பொருள்களாகவும் இருந்தான். பிறகு அவன் வடிவத்தைப் பெறுகின்றான். விந்து துளியிலிருந்து பல படித்தரங்களைக் கடந்து குழந்தையாகவும், பிறகு இளைஞனாகவும், பிறகு முதியவனாகவும் அவன் ஆகின்றான். சுருக்கமாக, பல்வேறு சமயங்களில் அவன் கடந்து வந்த இந்த எல்லா கட்டங்களிலும் அல்லாஹ்வின் ருபூபிய்யத் அதாவது அவனது படைத்து வளர்த்து காக்கின்ற பண்பை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த வரைபடம் எப்போதும் அவனது மூளையில் படமாக இருக்க வேண்டும். அப்போதுதான் இறைவனின் ருபூபிய்யத் என்ற அவனது படைத்து வளர்த்து காக்கின்ற பண்புக்கு எதிரில் அவனது அடியாராக இருக்கின்ற நிலையை அவன் வெளிப்படுத்த முடியும்.

அதாவது நான் எவ்வாறு பிறந்தேன்? எவ்வாறு ஒவ்வொரு நிலையையும் நான் கடந்து வந்தேன்? எவ்வாறு பெரியவனானேன்? அல்லாஹ் என்னை வளர்த்து பராமரித்து என்னை பெரியவனாக எவ்வாறு ஆக்கினான்? என்பதையெல்லாம் மனிதன் சிந்திக்கும்போதுதான் இறைவனின் உண்மையான அடியானாக இருப்பதன் உரிமையைச் செலுத்துவது பற்றி மனிதனால் சிந்திக்க முடியும். பிறகு அந்த உரிமையைச் சரியாக செலுத்தவும் முடியும்.

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000


National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

அவர்கள் கூறுகின்றார்கள்: சுருக்கமாக, தொழுகையில் இன்பத்தையும் ஆனந்தத்தையும் பெறுவது ருபூபிய்யத் அதாவது இறைவனின் ரப் என்ற பண்புக்கும் உபூதிய்யத் அதாவது இறைவனின் அடியானாக இருப்பது ஆகியவற்றிற்கு இடையில் ஏற்படுகின்ற தொடர்பின் மூலமாகவே உருவாகின்றது. அல்லாஹ்வின் ருபூபிய்யத் எதிர்பார்க்கும் வகையில் உங்களை நீங்களே ஒன்றுமற்ற எந்த தகுதியும் இல்லாத ஒரு பொருளாகக் கருதாத வரையில் அவனது அருளும் அவனது நிழலும் உங்கள் மீது படியாது. அல்லாஹ்வின் அருளிலிருந்து பயனடைய வேண்டும் என்றால் முழுமையான இறை அடியானாக இருக்கின்ற நிலையை உருவாக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த நிலை உருவாகி விட்டால் பிறகு மிக உயரிய நிலையிலுள்ள இன்பம் கிடைக்கின்றது. அதை விட பெரிய இன்பம் வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த தகுதியை பெறும்போது மனிதனின் ஆன்மா ஒன்றுமற்றதாக ஆகி விடுகின்றது. அது இறைவனின் பக்கம் ஒரு நீரூற்றைப் போன்று ஓடுகின்றது. அல்லாஹ்வை தவிர ஏனைய எல்லாவற்றிலிருந்தும் அது முழுமையாக துண்டிக்கப்பட்டு விடுகின்றது. அப்போது இறைவனின் அன்பு அதன் மேல் விழுகின்றது. மேலேயிலிருந்து ருபூபிய்யத் அதாவது இறைவனது ரப் என்ற பண்பின் உணர்வும், கீழிருந்து உபூதிய்யத் அதாவது மனிதன் இறைவனின் அடியானாக இருக்கின்ற உணர்வும் ஒரிடத்தில் ஒன்று சேரும்போது ஒரு சிறப்பான தொடர்பு உருவாகின்றது. அத்தகைய நிலை உருவாகும்போது இறைவனின் ருபூபிய்யத்தும் உணர்வு பெற்று விடுகின்றது. மனிதனின் உபூதிய்யத் அதாவது இறை அடியானாக இருக்கும் நிலையிலும் ஓர் உணர்வு பிறக்கின்றது. இந்த இரண்டும் ஒன்றுசேரும் போதுதான் ஒரு சிறப்பான தொடர்பு உருவாகின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: இதற்கே ஸலாத் என்று பெயர். இதுவே தீமைகளை எரித்து விடுகின்ற ஸலாத் ஆகும். மேலும் தனது இடத்தில் அது ஓர் ஒளியையும் பிரகாசத்தையும் விட்டுச் செல்கின்றது. இறை நெருக்கத்தைப் பெற விரும்புகின்ற ஒருவரது வழிப்பாதையில் உள்ள அபாயங்கள் மற்றும் துன்பங்களிலிருந்து அவரை பாதுகாப்பதற்கு ஓர் ஒளிமயமான தீபமாக அது பயன்படுகின்றது. ஒரு டார்ச் லைட் ஆக அது பயன்படுகிறது. அவரது வழியில் இருக்கின்ற எல்லா விதமான புற்பூண்டுகளிலிருந்தும் அவரை தடுமாறச் செய்யும் கற்களிலிருந்தும் இடையூறாக இருக்கின்ற பொருள்களிலிருந்தும் அவரைக் காப்பாற்றி அதைப் பற்றி அவருக்கு அது தெரிவித்து விடுகின்றது. அதாவது அவை அவருக்கு தென்படுகின்றது. இந்த நிலையில்தான் اِنَّ الصَّلٰوةَ تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ நிச்சயமாக தொழுகை –யானது வெட்கக் கேடான செயல்களிலிருந்தும் தீமைகளிலிருந்தும் ஒருவரை தடுக்கின்றது (29:46) என்பது அதற்கு முற்றிலும் பொருந்துகிறது. ஏனென்றால் அவரது கைகளில் அல்லாமல் அவரது உள்ளத்தில் ஒரு ஒளிமயமான தீபம் இருக்கின்றது. இந்த தகுதி முழுமையான பணிவு, முழுமையாக தன்னை ஒன்றுமற்றவனாகக் கருதுவது, முழுமையான தாழ்மைக் குணம், முழுமையாகக் கட்டுப்படுவது ஆகியவற்றின் மூலம் கிடைக்கின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: பிறகு பாவம் பற்றிய எண்ணம் அவருக்கு எப்படி வர முடியும்? மறுக்கின்ற தன்மை அவரிடம் உருவாகவே முடியாது. வெட்கங் கெட்ட செயல்களின் பக்கம் அவரது பார்வை எழவே முடியாது. சுருக்கமாக, எத்தகைய இன்பமும் ஆனந்தமும் அவருக்கு கிடைக்கின்றது என்றால் அதை வார்த்தைகளால் என்னால் கூற முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 164-166; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு தன்மான உணர்வுள்ள நம்பிக்கை கொண்ட ஒருவர் எல்லா நிலையிலும் அல்லாஹ்வின் முன்பு மட்டுமே குனிகின்றார். அவ்வாறு குனியவும் வேண்டும். அல்லாஹ் அல்லாதவர்களை அவர்கள் ஒருபோதும் தங்களது கவனத்திற்கும் நம்பிக்கைக்குரிய தலைமையக –மாகவும் ஆக்கிக் கொள்ளக் கூடாது.

இதைப் பற்றி விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த விஷயமும் நினைவில் கொள்ளத்தக்கதாகும். உண்மையான பொருளில் இருக்கின்ற தொழுகை –யானது துஆவின் மூலம் கிடைக்கின்றது. தொழுகையும் துஆவின் மூலமே கிடைக்கின்றது. அல்லாஹ் அல்லாதவற்றிடம் வேண்டுவது நம்பிக்கை கொண்ட ஒருவரிடம் இருக்க வேண்டிய தன்மான உணர்வுக்கு முற்றிலும் எதிரான செயலாகும். அல்லாஹ்விற்காகவே இந்த துஆவின் படித்தரமும் இருக்கின்றது. எதுவரை மனிதன் முழுமையான முறையில் தன்னை ஒன்றுமற்றவனாகக் கருதியவாறு அல்லாஹ்விடம் மட்டுமே கேட்பதில்லையோ அதுவரை அவன் உண்மையான முஸ்லிம் என்றும் உண்மையான நம்பிக்கை கொண்டவர் என்றும் கூறுவதற்கு தகுதியுடையவர் அல்ல. இஸ்லாத்தின் உண்மை நிலை என்னவென்றால், அவரது உட்புற மற்றும் வெளிப்புற ஆற்றல்கள் அனைத்தும் முழுமையாக அல்லாஹ்வின் முன்னிலையில் வீழ்ந்து கிடக்கின்றது. எவ்வாறு ஒரு பெரிய இஞ்சின் பல உறுப்புகளையும் இயக்க வைக்கின்றதோ அதுபோன்று எதுவரை மனிதன் தனது ஒவ்வொரு பணியையும், ஒவ்வொரு அசைவையும் அசையாமையையும் அந்த மகத்தான இஞ்சினின் மகத்தான ஆற்றலின் கீழ் கொண்டு வராமல் இருப்பானோ அதுவரை அந்நிலையில் அவர் அல்லாஹ்வின் இறைத் தன்மையை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? தன்னைத்தானே اِنِّىۡ وَجَّهۡتُ وَجۡهِىَ لِلَّذِىۡ فَطَرَ السَّمٰوٰتِ وَالۡاَرۡضَ (6:80) என்று கூறும் போது உண்மையிலேயே அவர் தன்னை ஹனீஃப் ஆக அதாவது இறைவன் பக்கம் குனிபவர் என்று கூறிக் கொள்ள முடியுமா? எவ்வாறு அவர் நாவால் கூறுவாரோ அவ்வாறே தனது உள்ளத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது தனது எல்லா கவனத்தையும் அல்லாஹ்வின் பக்கம் திருப்புவதை அவர் வெளிப்படுத்திக் கூறுகின்றார். சுயமே தன்னைப் பற்றி இறைவன் பக்கம் குனிகின்ற ஓரிறைக் கொள்கையை உடையவர் என்று கூறிக் கொள்கின்றார். பிறகு முழு கவனத்தையும் அவர் அவன் பக்கம் திருப்ப வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த நிலை உருவாகி விட்டால் சந்தேகமின்றி அவர் முஸ்லிம் ஆக இருக்கின்றார். உறுதியாக அவர் நம்பிக்கை கொண்டவராகவும் ஹனீஃப் ஆக அதாவது இறைவன் பக்கம் குனிபவராக அவர் இருக்கின்றார். ஆனால், எவர் அல்லாஹ்வை விட்டு விட்டு அல்லாஹ் அல்லாதவற்றிடம் கேட்கின்றாரோ, அந்த பக்கமும் குனிகின்றாரோ அவர் மிகவும் துர்பாக்கியசாலியும் பேரிழந்தவரும் ஆவார். அவர் வெறும் நாவளவிலும் காட்டுவதற் –காகவும் கூட அல்லாஹ்வின் பக்கம் குனிய முடியாத ஒரு நேரம் அவரிடம் வரவிருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''தொழுகையை விட்டு விடுவது மற்றும் அதில் சோம்பேறித்தனம் காட்டுவதற்கு இன்னொரு காரணமும் இருக்கின்றது. ஏனென்றால், மனிதன் அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் குனியும்போது அவரது ஆன்மா மற்றும் உள்ளத்தின் ஆற்றல் அந்த மரத்தைப் போன்று ஆகி விடுகின்ற. அந்த மரத்தின் கிளையை ஆரம்பத்தில் ஒரு பக்கமாக திருப்பி விட்டால் அந்த பக்கமே அது குனிந்து வளர்ந்து வந்தால் பிறகு அந்த பக்கம்தான் அது குனிகின்றது.'' மிக முக்கியமான விஷயத்தைக் கூறுகின்றார்கள். தொழுவதை விட்டு விட்டால் அல்லது தொழுவதில் சோம்பேறித்தனம் காட்டினால், அல்லாஹ்வை விட்டு விட்டு வேறு பக்கம் அதிகமாக காத்திருக்க ஆரம்பித்து விட்டால் பிறகு மனிதன் இறைவனை விட்டு விலகி வெகு தொலைவில் சென்று விடுகின்றான். ஒரு மரத்தின் கிளையை ஒரு பக்கமாக திருப்பி விட்டால் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்த கிளை அந்தப் பக்கமே திரும்ப ஆரம்பித்து விடுகின்றது. இதுபோன்றே மனிதனும் இறைவனை விட்டு விட்டு வேறு திசையில் சென்று விடுகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனிடம் இருந்து ஒரு கடுமை அவனது உள்ளத்தில்

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

உருவாகி அவனை ஒட்டுமொத்தமாக ஒரு கல்லாக ஆக்கி விடுகின்றது. எவ்வாறு ஒரு பக்கமாக திருப்பி விடப்பட்ட மரத்தின் கிளையானது மற்ற பக்கம் திரும்ப முடியாமல் ஆகி விடுகின்றதோ அவ்வாறே அவனது உள்ளமும் ஆன்மாவும் நாளுக்கு நாள் இறைவனை விட்டு தொலைவில் விலகிச் சென்று விடுகின்றது. எனவே, மனிதன் அல்லாஹ்வை விட்டு விட்டு மற்றவர்களிடம் கேட்பது மிகவும் அபாயகரமான உள்ளத்தை நடுங்கச் செய்கின்ற விஷயமாகும். எனவேதான் தொழுகையை விடாமல் முறையாகப் பேணி வருவது மிகவும் அவசியமான விஷயமாகும். அதன் மூலம் முதலில் உறுதியாகப் பதிந்து விடுகின்ற ஒரு பழக்கம் போல் அது நிலைநிற்க வேண்டும். அல்லாஹ்வின் பக்கம் திரும்புவது பற்றிய எண்ணம் இருக்க வேண்டும். படிப்படியாக அவன் செதுக்கப்பட்டு மனிதன் எல்லாவற்றிலிருந்தும் முழுமையாக துண்டிக்கப்பட்டு ஓர் ஒளி மற்றும் இன்பத்திற்கு வாரிசாகி விடுகின்றான். எல்லாப் பொருள்களை விட்டும் தனியாக விலகிச் சென்று விடுகின்றான். அல்லாஹ்வின் பக்கம் மட்டுமே அவனது திரும்புதல் இருக்கின்றது. அப்போது மனிதனுக்கு ஓர் ஒளி கிடைக்கின்றது. இன்பம் கிடைக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த விஷயத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றேன். அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் திரும்புவதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கான சொற்கள் எனக்கு கிடைக்கவில்லை என்பதற்காக நான் வருந்துகின்றேன். மக்களிடம் சென்று அவர்களைப் புகழ்கின்றனர். இறைவனது தன்மான உணர்வைத் தூண்டுகின்றனர். இது மக்களின் தொழுகையாகும். அந்த இறைவன் அதை விட்டு விலகிச் சென்று விடுகின்றான். அதை தொலைவில் எறிந்து விடுகின்றான். இவ்விஷயம் நான் கூறுவதுபோல் இல்லை என்றாலும் வன்மையான சொற்களில் நான் இதை கூறுகின்றேன். அதன் மூலம் இவ்விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். ஒரு ரோஷமுள்ள மனிதனின் தன்மான உணர்வானது தனது மனைவி இன்னொருவருடன் தொடர்பு வைத்திருப்பதைப் பார்த்து அதை சகித்துக் கொள்ளாதோ, எவ்வாறு அந்த சமயத்தில் அந்த ஆண் அந்த தகுதியற்ற பெண் கொலை செய்யப்பட வேண்டியவள் என்று கருதுகின்றானோ இன்னும் சொல்வதென்றால், அத்தகைய சம்பவங்களும் கூட நிகழ்ந்து விடுகின்றது. அதுபோன்ற உணர்வும் தன்மான உணர்வும்தான் இறைத் தன்மைக்கும் இருக்கின்றது. அல்லாஹ் மிகவும் தன்மான உணர்வுள்ளவனாக இருக்கின்றான். எனவே, இறைத் தன்மையை வழங்குவதும் துஆ செய்வதும் அந்த இறைவனிடம் மட்டுமே தொடர்புடையவை –யாக இருக்க வேண்டும். அந்த இறைவனுக்கு எதிரில் மட்டுமே இவை இருக்க வேண்டும். வேறு ஒருவனை வணக்கத்திற்குரியவனாக ஆக்குவதை அல்லது அவனை அழைப்பதை அவன் விரும்புவதில்லை.

எனவே, நன்றாக நினைவில் கொள்ளுங்கள். மீண்டும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் குனிவது இறைவனிடம் இருந்து தன்னை துண்டித்துக் கொள்வதாகும். தொழுகை, ஏகத்துவம் என்று எதை நீங்கள் கூறினாலும் ஓரிறைமையை செயலளவில் ஏற்றுக் கொள்வதன் மறு பெயரே தொழுகையாகும். அந்த தொழுகையில் பணிவும் குனிகின்ற உள்ளமும் இல்லையென்றால் அந்த தொழுகை அருள்களற்ற –தாகவும் பயனற்றதாகவும் ஆகி விடுகின்றது. (மல்.'பூஸாத் தொகுதி 1 பக்கம் 166-168; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) சில மக்கள் தொழுகையில் வேறு எண்ணங்களும், சலனங்களும் வந்து கொண்டிருக்கின்றது என்று கூறுகின்றனர்.

பிறகு தொழுகையில் சலனங்கள் உருவாவதற்கான காரணம் பற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எவர்கள் இறைவன் பக்கம் முழுமையாக திரும்புவ –தில்லையோ அவர்களுக்குத்தான் தொழுகையில் பல சலனங்களும் சந்தேகங்களும் வருகின்றன. ஒரு கைதி அரசனுக்கு முன்னால் நிற்கும்போது அவனது உள்ளத்தில் ஏதாவது சந்தேகம் ஏற்பட முடியுமா? அப்படிப்பட்டவரது உள்ளத்தில் வேறு எந்த எண்ணமும் வர முடியாது. ஒருபோதும் அவனது உள்ளத்தில் எந்த எண்ணமும் வராது. இதே உதாரணம்தான் இந்த மனிதனுக்கும் பொருந்துகிறது. எப்போதும் அவர் அரசரின் பக்கமே கவனம் செலுத்துவார். இப்போது அரசர் என்ன கட்டளையை பிறப்பிக்கப் போகின்றார் என்ற கவலையில் அவர் இருப்பார். அப்போது தன்னைப் பற்றியே முற்றிலும் அறியாதவராக அவர் இருப்பார். அவ்வாறே மனிதன் உண்மையான உள்ளத்துடன் இறைவன் பக்கம் திரும்பும்போது உண்மையான உள்ளத்துடன் அவன் முன்னிலையில் விழும்போது ஷய்த்தான் அவரிடம் சந்தேகங்களை எப்படி ஏற்படுத்த முடியும்? (மல்.'பூஸாத் தொகுதி 10 பக்கம் 66; 1985 ஆம் ஆண்டு பதிப்பு- இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) தொழுகையை ஏன் பாதுகாக்க வேண்டும்? ஏன் தொழ வேண்டும்? அல்லாஹ்வுக்கு நமது தொழுகைகளின் தேவை இருக்கின்றதா? பெரும்பாலான மக்களின் எண்ணங்களில் இன்றைய நாட்களில் காணப்படும் நாத்திகத்தின் காரணமாக இதுபோன்ற கேள்விகள் எழுந்து கொண்டிருக்கின்றது. அல்லாஹ் தன்னிறைவு பெற்றவனாவான். அவனுக்கு நமது இறை வணக்கங்கள் தேவையில்லை.

நமக்கு அவனது தேவை இருக்கின்றது என்பதை விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவனுக்கு தொழுகைகள் தேவைப்படுவதால் தொழுகைகள் பாதுகாக்கப்படவில்லை. இறைவனுக்கு நமது தொழுகைகளின் எந்த தேவையும் இல்லை. அவன் எல்லா உலகங்களை விட்டும் தன்னிறைவு பெற்றவனாவான். அவனுக்கு யாருடைய தேவையும் இல்லை. இதன் கருத்து மனிதனுக்கு இறைவனின் தேவை இருக்கின்றது. இது ஒரு இரகசியமாகும். அதாவது சுயமே மனிதன் தனக்கு நல்லதை விரும்புகின்றான். எனவேதான் அவன் இறைவனிடம் உதவி கேட்கின்றான். மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பு ஏற்படுவது உண்மையான நன்மையைப் பெறுவதாகும் என்பதே உண்மையாகும். அத்தகைய நபருக்கு முழு உலகமும் எதிரியாக ஆகி விட்டாலும் அவரை அழிக்க முற்பட்டாலும் அவருக்கு எந்த சீர்குலைவையும் ஏற்படுத்த முடியாது. மேலும் இறைவன் அந்த நபருக்காக இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான மனிதர்களை அழிக்க வேண்டியது வந்தாலும் அவர்களை அழித்து விடுகின்றான். அந்த ஒருவருக்கு பதிலாக இலட்சக்கணக்கான மனிதர்களை அவன் அழித்து விடுகின்றான். (மல்.'பூஸாத் தொகுதி 10 பக்கம் 66; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஸஹாபாக்கள் எவ்வாறு வெற்றி பெற்றனர்? இதுபற்றி விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: கலப்பற்ற தன்மை போன்று உள்ளங்களை வெல்கின்ற வேறு எந்த வாளும் இல்லை. இதுபோன்ற விஷயங்கள் மூலமாகவே அவர்கள் உலகில் வெற்றி பெற்றனர். வெறும் நாவளவிலான பேச்சுக்களால் மட்டும் ஒருபோதும் எதுவும் நடந்து விட முடியாது. இப்போது நெற்றியில் ஒளியும் இல்லை. ஆன்மீகம் இல்லை. இறை ஞானத்தின் எந்தப் பகுதியும் இல்லை. தொழுகை பற்றிய ஞானம் இல்லை. தொழுவதினால் கிடைக்க வேண்டிய ஒளியும் இல்லை. தொழுகையும் சுமையாகக் கருதப்படுகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் அநீதியிழைப்பவன் அல்ல. அசல் விஷயம் என்னவென்றால், அவர்களது உள்ளங்களில் கலப்பற்ற தன்மை இல்லை. வெறுமனே சடங்கு என்ற ரீதியிலும் பழக்கத்தின் காரணமாக மட்டும் செய்யப்படுகின்ற வெளிப்படையான செயல்களைத் தவிர அவர்களிடம் வேறு எதுவும் இல்லை.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் கலப்பற்ற தன்மையுடன் தொழுகைகளை நிறைவேற்றுகின்ற பலர் இருக்கின்றனர். அந்தக் காலத்திலுள்ள நிலைமையை ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இதில் நமக்கு படிப்பினையும் இருக்கின்றது. எச்சரிக்கையும் இருக்கின்றது. இவ்விஷயங்களை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதனால் தொழுகையை நான் இழிவுபடுத்துகின்றேன் என்று எவரும் கருத வேண்டாம். திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்ட தொழுகை மிஃராஜ் – ஏணிப்படியாக இருக்கின்றது. இந்த தொழுகையாளிகளிடம் எவராது இவர்களுக்கு சூரா ஃபாத்திஹாவின் பொருளாவது தெரியுமா? என்று கேட்கட்டும். 50 வருடங்களாக தொழுபவர்கள் உங்களுக்கு கிடைப்பார்கள். ஆனால், தொழுகையின் பொருளையும் அதன் உண்மை நிலையையும் பற்றி கேட்டால் அவர்களில் பெரும்பாலாருக்கு அது பற்றி தெரியாது. எல்லா உலக அறிவுகளும் இந்த அறிவுகளுக்கு முன்னால் ஒன்றுமற்றதாகும். உலக அறிவுகளைப் பெறுவதற்காக உயிரை மாய்த்துக் கொள்ளும் வகையில் உழைப்பும் முயற்சியும் செய்யப்படுகின்றது. ஆனால் தொழுகையின்

பக்கம் எந்த அளவு கவனமின்மை இருக்கின்றது என்றால் மந்திரங்களை உச்சரிப்பது போன்று தொழுகையின் சொற்களைக் கூறுகின்றனர்.

இந்தக் காலத்திலும் இதே நிலைதான் இருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எதுவரை கூறுகின்றேன் என்றால் தொழுகையில் நீங்கள் தத்தமது சொந்த தாய்மொழிகளில் துஆ செய்வதிலிருந்து உங்களை தடுத்துக் கொள்ளாதீர்கள். உருதுவில், பஞ்சாபியில், ஆங்கிலத்தில் மற்றும் அவரவரது சொந்த மொழிகளில் துஆ செய்ய வேண்டும். எனினும், இறைவனது வார்த்தைகளை அப்படியே படிப்பது அவசியமானதாகும். அதில் உங்கள் தரப்பிலிருந்து எதையும் நுழைத்து விட வேண்டாம். அதனை அப்படியே படிப்பதுடன் அதன் பொருளை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அவ்வாறே சுன்னத்தான துஆக்களையும் அவற்றின் மொழியிலேயே முறையாகப் படித்து வர வேண்டும். திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தான துஆக்களுக்குப் பிறகு நீங்கள் விரும்புவதை இறைவனிடம் கேளுங்கள். நீங்கள் விரும்புகின்ற எந்த மொழியிலும் கேளுங்கள். அவனுக்கு எல்லா மொழிகளும் தெரியும். அவன் துஆக்களைக் கேட்கின்றான். அவற்றை ஏற்றுக் கொள்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் உங்கள் தொழுகைகளை இனிமையானவையாகவும் ஆர்வமூட்டக் கூடியவையாகவும் ஆக்க விரும்பினால் உங்களது தாய் மொழியில் சில துஆக்களைச் செய்ய வேண்டியது அவசியமானதாகும். பெரும்பாலும் இதைத்தான் நாம் பார்க்கின்றோம். தொழுகையை விரைவாகக் குனிந்து எழுந்து நிறைவேற்றி விடுகின்றனர். தொழுகைக்குப் பிறகு துஆக்கள் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் அஹ்மதி அல்லாதவர்களிடம் இதுவே வழக்கமாக இருந்து வருகின்றது. அதாவது தொழுகையை விரைவாக தொழுது முடித்து விட்டு அதற்குப் பிறகு கையேந்தி துஆ செய்ய ஆரம்பித்து விடுகின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதிலிருந்து தொழுகை தேவையில்லாமல் திணிக்கப்படும் வரி போன்று தெரிகின்றது. ஏதாவது கலப்பற்ற தன்மை இருந்தால் தொழுகைக்குப் பிறகே அது வெளிப்படுகின்றது. சுயமே தொழுகை என்பது துஆவின் மறுபெயராகும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அது மிகவும் தாழ்மையுடனும், கலப்பற்ற தன்மையுடனும், பணிவுடனும், நிம்மதியற்ற நிலையிலும் கேட்கப்படும் துஆவாக இருக்கின்றது. பெரும் பெரும் மகத்தான பணிகளின் திறவுகோல் துஆ மட்டுமேயாகும். இறைவனது அருளின் திறவுகோல் துஆ மட்டுமேயாகும். இறைவனது அருளின் கதவுகளை திறப்பதற்கான முதல் படித்தரம் துஆவேயாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகையை சடங்கு என்ற ரீதியிலும் பழக்கத்தின் அடிப்படையிலும் நிறைவேற்றுவது பயனளிக்காது. மாறாக, அத்தகைய தொழுகையாளிகள் மீது அல்லாஹ் சாபமிடுவதுடன் அவர்களுக்கு அழிவுதான் என்று கூறுகின்றான். அவ்வாறிருக்க அத்தகைய தொழுகைகள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற சிறப்பை எவ்வாறு பெற முடியும்? (107:5) فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ۙ தொழுகையாளி –களுக்கு அழிவுதான் என்று சுயமே இறைவன் தான் கூறியுள்ளான். இது தொழுகையின் உண்மை நிலையையும் அது வேண்டுவதையும் பற்றி அறியாமல் தொழுபவர்கள் பற்றியே கூறப்பட்டிருக்கின்றது. சஹாபாக்களுக்கு அரபி மொழி தெரிந்திருந்தது. அவர்கள் அதன் உண்மை நிலையை புரிந்திருந்தனர். ஆனால், நாம் அதன் பொருளை புரிந்து கொள்வதும் அதில் இதன் மூலம் இனிமையை உருவாக்குவதும் அவசியமான –தாகும். ஆனால், அந்த மக்களோ வேறு ஒரு நபி வந்து தொழுகையை ரத்து செய்து விட்டார் என்று கருதுகின்றனர். அவர்களுக்கு எதிராக பேசுபவர்களைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள். அதாவது அன்னார் நீங்கள் உங்களது சொந்த தாய் மொழியில் துஆ செய்யுங்கள் என்று கூறியதைக் கேட்டு விட்டு இவர் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வந்து விட்டார் என்று மக்கள் கூறுகின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதில் இறைவனுக்கு எந்த பயனும் இல்லை. சுயமே மனிதனுக்கு தான் இதில் பயன் இருக்கின்றது. இறைவன் முன்னிலையில் நிற்பதற்கான சந்தர்ப்பம் அவனுக்கு தரப்படுகின்றது. அவனிடம் வேண்டுகின்ற கண்ணியம் வழங்கப்படுகின்றது. அதன் மூலம் பல துன்பங்களிலிருந்து மனிதன் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கின்றான். எனக்கு வியப்பாக இருக்கின்றது. இந்த மக்கள் எப்படி தங்கள் வாழ்வைக் கழித்து வருகின்றனர்? அவர்களது இரவும் பகலும் அவர்களைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. ஆனால், இவர்களுக்குக்கென்று ஓர் இறைவன் இருக்கின்றான் என்பது கூட இவர்களுக்கு தெரியவில்லை. அத்தகைய மனிதன் இன்றும் அழிந்து விட்டான். நாளையும் அழிந்து விடுவான் என்பதை நினைவில் வையுங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் உங்களுக்கு அவசியமான ஓர் அறிவுரையைக் கூறுகின்றேன். அந்தோ! இது மக்களின் உள்ளங்களில் பதிந்து விட வேண்டுமே! பாருங்கள்! வாழ்நாள் கழிந்து கொண்டே இருக்கின்றது. கவனமின்மையைக் கை விட்டு விடுங்கள். மன்றாடுகின்ற நிலையை உருவாக்குங்கள். தனிமையில் இருந்து இறைவனிடம் துஆ செய்யுங்கள். இறைவன் ஈமானை பாதுகாப்பானாக. உங்கள் மீது திருப்தி அடைந்து அவன் மகிழ்ச்சியாக இருக்கட்டும். (மல்∴பூஸாத் தொகுதி 10 பக்கம் 411-413; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

உண்மையான தொழுகை என்றால் என்ன? என்பதைப் பற்றி போதனை செய்தவாறு ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் கூறினார்கள்: وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ۗ وَاِنَّ اللّٰهَ لَمَعَ الْمُحْسِنِيْنَ எவர் எமது வழியில் முயற்சி செய்கின்றாரோ அவர் எம்மை வந்தடையும் வழியை நாம் அவருக்குக் காட்டுவோம். முழுமையான முயற்சியுடன் அவனது வழியில் சென்று கொண்டிருங்கள். அதன் மூலம் சென்று சேர வேண்டிய இடத்திற்குச் சென்று சேர்ந்து விடுவீர்கள். இதற்காக முயற்சி செய்யுங்கள். தவ்பா செய்வதும் இஸ்திக்ஃபாரும் இறைவனைச் சென்றடைவதற்கான வழிகளாகும். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எவர் எமது வழியில் முயற்சி செய்கின்றாரோ அவர்கள் எம்மை வந்தடையும் சரியான வழியை நாம் அவர்களுக்கு காட்டுவோம் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் எவரிடமும் கருமித்தனத்தைக் காட்டுவதில்லை. இறுதியாக இந்த முஸ்லிம்களிலிருந்துதான் பெரும் ஞானிகளும் இறைநேசர்களும் உருவாகி விடுகின்றனர். அவனது கருணையின் கதவுகள் அடைக்கப்படவில்லை. ஏற்றுக் கொள்ளக்கூடிய உள்ளத்தை உருவாக்குங்கள். தொழுகையை சரியான முறையில் நிறைவேற்றுங்கள். துஆக்கள் செய்யுங்கள். நமது போதனைகளுக்கேற்ப செயல்படுங்கள். நாமும் துஆ செய்வோம். நினைவில் கொள்ளுங்கள். நமது வழிமுறை முற்றிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் வழிமுறையேயாகும். இன்றைய நாட்களில் ஃபகீர், மார்க்கத்தில் பல பித்அத்துகளை ஏற்படுத்தி விட்டனர். சில்லா மற்றும் சில சொற்களை திரும்பத் திரும்ப கூறுவதை அவர்கள் புகுத்தி இருக்கின்றனர். இவற்றை நாம் விரும்புவதில்லை.

பல மக்களும் எழுதுகின்றனர். குறிப்பாக நாங்கள் எந்த துஆவை செய்ய வேண்டும் என்று எங்களுக்கு கூறுங்கள். நாங்கள் என்ன முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்கின்றனர். அசல் விஷயம் தொழுகையை பேணுவதாகும். ஒவ்வோர் அஹ்மதிக்கும் தொழுகையின் பக்கம் முழுமையான கவனம் இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் அசல் வழிமுறை திருக்குர்ஆனை கவனத்துடன் ஓதுவதும் அதில் கூறப்பட்டிருப்பவைக்கு ஏற்ப செயல்படுவதுமாகும். தொழுகையை கவனத்துடன் நிறைவேற்றுவது துஆக்களை கவனத்துடனும் இறைவன் பக்கம் திரும்பியவாறும் செய்து கொண்டிருப்பது அவசியமானதாகும். தொழுகையே ஒருவரை மிஃராஜின் உயர் தகுதி வரை கொண்டு செல்கின்றது. இது இருந்து விட்டால் எல்லாமே இருந்து விடும். (மல்∴பூஸாத் தொகுதி 10 பக்கம் 107; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

மேலும், மிஃராஜ் வரை கொண்டு செல்கின்ற தொழுகை எத்தகையது என்றால் அது அல்லாஹவின் முன்னிலையில் நிற்பவரது உள்ளத்தை உருக்கி விடுகின்றது. கடமையான தொழுகையுடன் அன்னார் தஹஜ்ஜுத் தொழுவது பற்றியும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். அன்ஸாருல்லாஹ் குறிப்பாக இதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த வாழ்க்கையின் எல்லா மூச்சுகளும் உலகப் பணியிலேயே கழிந்து விட்டால் மறுமைக்கு என்று எதனை நாம் ஒன்று திரட்டி வைத்துள்ளோம். முழு வாழ்நாளையும் உலகப் பணிகளில் ஈடுபடுவதிலேயே

கழித்து விட்டால் பிறகு மறுமைக்கு என்று நாம் எதனை சேர்த்து வைத்திருக்கின்றோம்?

அவர்கள் கூறுகின்றார்கள்: குறிப்பாக தஹஜ்ஜுத்தில் எழுந்து இன்பத்துடனும் ஆர்வத்துடனும் தஹஜ்ஜுத் தொழ வேண்டும். இடையில் வரும் தொழுகைகளை நிறைவேற்று –வதில் வேலையின் காரணமாக சோதனை வந்து விடுகின்றது. உணவளிப்பவன் அல்லாஹ் ஆவான். தொழுகையை அதற்குரிய குறித்த நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளை எப்போதாவது சேர்த்து தொழுது கொள்ளலாம். அல்லாஹ் பலவீனமானவர்கள் இருப்பார்கள் என்பதை அறிந்திருந்தான். எனவே, அந்த வசதியை அவன் ஏற்படுத்தித் தந்திருக்கின்றான். ஆனால், இந்த் வசதியை மூன்று தொழுகைகளை ஒன்று சேர்த்து தொழுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. வேலையிலும் ஏனைய பல விஷயங்களிலும் மக்கள் தண்டனையைப் பெறுகின்றனர். ஆட்சியாளர்களின் தரப்பிலிருந்து இழைக்கப்படும் துன்பங்களுக்கு ஆளாகின்றனர். அவ்வாறிருக்க அவர்கள் அல்லாஹ்வுக்காக துன்பங்களை சகித்துக் கொண்டால் அது எவ்வளவு நன்றாக இருக்கும்? (மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 149-150; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) உலகப் பணிகளுக்காக அவர்கள் துன்பங்களை சகித்துக் கொள்கின்றனர். அவ்வாறிருக்க தொழுகையை நிறைவேற்றுவதற்காக, தனது கடமையை நிறைவேற்றுவதற்காக, அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப நடப்பதற்காக சிறிது துன்பங்களை சகித்துக் கொள்வதினால் என்ன வந்து விடப் போகின்றது?

அவர்கள் கூறுகின்றார்கள்: “இது அல்லாஹ்வின் முழுமையான அருளாகும். அவன் எவ்வித உழைப்பும் இல்லாமல் நமக்கு முழுமையான சிறப்பான கொள்கைகளின் வழியை நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் மூலமாக காட்டியுள்ளான். எந்த வழி இந்தக் காலத்தில் உங்களுக்கு காட்டப்பட்டிருக்கின்றதோ அந்த வழியிலிருந்து ஆலிம்கள் இப்போது வரை விலகியே இருக்கின்றனர்.”

அஹ்மதிகளுக்கு அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணமாக சரியான வழியைக் காட்டி இருக்கின்றான். இறைவனது இந்த அருளுக்கு நன்றி செலுத்துங்கள். உண்மையான உள்ளத்துடன் சரியான கொள்கைகளுக்குப் பிறகு இரண்டாவது பகுதியில் வருகின்ற பொருத்தமான நற்செயல்களைச் செய்வதுதான் இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகும். உங்களது இந்த நிலைமை மூலம் உதவி பெற்று அவனிடம் துஆ கேளுங்கள். அவன் அந்த சரியான கொள்கைகளில் உங்களை உறுதியுடன் நிலைநிற்கும்படி செய்வானாக. நற்செயல்களைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இறைவணக்கங்களில் நோன்பு, தொழுகை, ஸக்காத் போன்றவை அடங்கும். இப்போது நினைத்து பாருங்கள். உதாரணமாக தொழுகை இருக்கின்றது. அது உலகத்திற்கு வந்திருக்கின்றது. ஆனால், உலகிலிருந்து வரவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குர்ரத்து அய்னி ஃபிஸ்ஸலாத் – எனது கண்களின் குளிர்ச்சி தொழுகைகளில் இருக்கின்றது என்று கூறியுள்ளார்கள். (மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 149-150; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையான ஓரிறைமை எவ்வாறு முழுமை அடைகின்றது என்பதை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: தவ்ஹீது எப்போது முழுமை அடைகின்றது என்றால் தேவைப்படுகின்ற அனைத்தையும் வழங்குபவனும், எல்லா நோய்களையும் அகற்றுபவனும் அந்த ஏக இறைவன் மட்டுமே ஆவான் என்று உறுதி கொள்ள வேண்டும். லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருள் இதுவே ஆகும். சூஃபிகள் இலாஹ் என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரியவன், குறிக்கோளாக இருப்பவன், நேசத்திற்குரியவன் என்று பொருள் கூறியுள்ளனர். உண்மை அதுவே ஆகும். எதுவரை மனிதன் ஓரிறைமையில் நிலைத்து நிற்காமல் இருக்கின்றானோ அதுவரை இஸ்லாத்தின் மீதுள்ள அன்பையும் அதன் மகத்துவத்தையும் அவன் நிலை நாட்ட முடியாது.

பிறகு நான் அசல் விஷயத்தின் பக்கம் திரும்பியவாறு கூறுகின்றேன். அப்படிப்பட்ட மனிதனுக்கு தொழுகையின் இன்பமும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*


**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக் -கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

**திருக்குர்ஆனிலிருந்து...**

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷைத்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப்போல)க் கொடுக்கவும், கட்டளையிடுகின்றான்... (16:91)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*தீயவற்றைப் பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. ஆயினும் அநீதிக்கு ஆளானவரைத் தவிர. (அவர்கள் அநீதியை வெளியிடலாம்). அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (41:49)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.** [16:129]

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தேவையின்றி அனாவசியமாக வாள் ஏந்துவது என்பது இஸ்லாத்தின் நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 60-61; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவனின் நபியும், கலீஃபாவும் உலகில் தோன்றி மக்கள் அனைவரும் எவ்வித சலசலப்புமின்றி அவரை அப்படியே ஒப்புக் கொண்டதாக உலகில் ஒருபோதும் நிகழவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 148; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில்

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**எனது வருகையின் நோக்கம் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் இஸ்லாத்தின் வெற்றியாகும்.** [மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 245–246; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது]

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**நபி [ஸல்] அவர்கள் அசுத்தத்தில் அமர்ந்திருந்த ஒரு சமுதாயத்தை அசுத்தத்திலிருந்து அகற்றி மலர்கள் நிறைந்த தோட்டத்தில் அவர்களைக் கொண்டு சென்றார்கள்.** *[ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117–119]*

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)*

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)*

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அல்லாஹ் வீண் வாய்ப் பேச்சுக்களை வாதங்களை விரும்புவதில்லை. அவன் உண்மையான இறை அச்சத்தையும், உண்மையான தூய்மையையும் விரும்புகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 60-61; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான். ஏனென்றால் உலகில் மறைந்திருக்கின்ற கருவூலங்களை நான் வெளிப்படுத்த வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 60-61; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஷரீஅத்தும், நபித்துவமும் முழுமை பெற்று விட்டது. இனி எந்தவொரு புதிய ஷரீஅத்தும் இறங்க முடியாது. திருக்குர்ஆன் இறுதி வேதமாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 245-246; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**உலகம் முடிவுறப் போகின்றது. ஆனால், இந்த முழுமை பெற்ற நபி [ஸல்] அவர்களின் அருளின் கதிர்கள் இப்போது வரை முடிந்து விடவில்லை.** *[ஹகீத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117–119]*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**நான் எழுதுகோல் எனும் ஆயுதத்தை ஏந்தி அறிவியல் மற்றும் அறிவின் முன்னேற்றத்தின் களத்தில் இறங்கி பணி செய்ய வேண்டும் இறைவன் எனக்கு கவனமூட்டியுள்ளான்.** [மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 59–60; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது]

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தற்போதைய காலத்தின் தேவை வாள் இல்லை. மாறாக, எழுதுகோல்தான் என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 59-60; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**திருக்குர்ஆனின் ஒவ்வொரு தீய எதிரியின் ஆட்சேபனை என்னும் கறைகளிலிருந்து தூய்மைப்படுத்தி அதன் கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன்.** [மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 60–61; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது]

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இஸ்லாத்தின் உதவிக்காவும், அதனை தழைத்தோங்க செய்யவும் தனது வாக்குறுதிக்கேற்ப இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 245-246; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 2 November 2017 Issue No. 44

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

நிறைவேறியிருக்கின்றது என்றால் ஏணிப்படிகளின் மூலம் கீழே இறங்கி வருவதற்கு எந்த அளவு நேரம் தேவைப்படுமோ அந்த அளவு தான் எனது இந்த இல்ஹாம் நிறைவேறுவதற்கு நேரம் தேவைப்பட்டது என்று கூறினேன். ஷேக் ஹாமிது அலி இப்போது வரை இருக்கின்றார். அவர் தம்ஆ குலாம் நபி என்ற இடத்தில் வசித்து வருகின்றார். இந்த நாட்களில் எனக்கு அருகில் அவர் இருந்து வருகின்றார். எந்த ஒரு நபரும் இன்னொருவருக்காக தனது ஈமானை இழக்க முடியாது. அந்த இருவருக்கிடையில் குரு, சீடர் என்ற நிலையில் தொடர்பு இருக்கும்போது ஒரு நபர் தனது சீடரிடம் நான் எனக்காக பொய்யான ஓர் அற்புதத்தை உருவாக்கியுள்ளேன். நீ எனக்காக சாட்சி கூற வேண்டும் என்று கூறினால் அப்போது அவர் தனது உள்ளத்தில் இவர் ஒரு சூழ்ச்சிக்காரராகவும் தீய மனிதராகவும் இருக்கின்றார். நான் தேவையில்லாமல் அவரது கைகளில் எனது கையைக் கொடுத்து விட்டேன் என்று கண்டிப்பாக கூறுவார். இவ்வாறே நான் எனது நூலில் எத்தனை முன்னறிவிப்புகளை எழுதியுள்ளேனோ அவற்றின் உண்மைக்கு எனது ஆயிரக்கணக்கான சீடர்கள் சாட்சிகளாக இருக்கின்றனர். அறிவில்லாத ஒருவர் சீடரின் சாட்சியை எப்படி நம்ப முடியும் ? என்று கேட்கலாம். இந்த சாட்சி போன்று வேறு சாட்சியே இல்லை என்று நான் கூறுகின்றேன். ஏனென்றால், இந்த தொடர்பு மார்க்கத்திற்காக மட்டுமே இருக்கின்றது. மனிதன் எவரை தனது அறிவிற்கு ஏற்ப உலகிலுள்ள எல்லாரையும் விட அதிகமாக நல்லியல்பை உடையவராகவும் இறையச்சமுடையவராகவும் உண்மை பேசுபவராகவும் கருதுவானோ அவருக்கே அவன் சீடராகின்றான். வழிகாட்டியாக இருப்பவர் நூற்றுக்கணக்கான பொய்யான முன்னறிவிப்புகளை தன் தரப்பிலிருந்தும் புனைந்து கூறியவாறு சீடர்களின் முன்னிலையில் கை கூப்பியவாறு எனக்காக நீங்கள் பொய் கூறுங்கள். எப்படியாவது பொய் கூறி என்னை வலி ஆக ஆக்கி விடுங்கள் என்று கூறுகின்ற நிலையில் இருந்தால் அவரை அவரது சீடர்கள் நல்ல மனிதர் என்று எப்படி கூறுவர் ? தனது பொருளைக் கொண்டும் உயிரைக் கொண்டும் எப்படி அவர்கள் அவருக்கு தொண்டு செய்ய முடியும் ? அவரை ஒரு ஷய்த்தான் என்று கூறியவாறு அவர்கள் அவரை விட்டும் விலகிச் சென்று விடுவர். என்னுடன் பொய்யான அற்புதங்களை தொடர்புபடுத்திக் கூறுகின்ற அத்தகைய சீடர்கள் மீது நான் சாபமிடுகின்றேன். பொய்யான அற்புதங்களை உருவாக்குகின்ற அத்தகைய வழிகாட்டியும் கூட சாபத்திற்குரியவராக இருக்கின்றார்.

**என்பத்தி நான்காவது அடையாளம்: 5** ஆகஸ்ட் *1906* -ல் ஒருமுறை எனது உடலின் கீழ்ப்பகுதியின் பாதி பகுதி உணர்வில்லாமல் ஆகி விட்டது. ஓர் அடி கூட எடுத்து வைப்பதற்கு சக்தி இல்லாமல் இருந்தது. யூனானி மருத்துவ நூல்களின் பல பாடங்களை நான் படித்திருந்ததால் இது பக்கவாதத்தின் அடையாளமாக இருக்கின்றது என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அத்துடன் கடுமையான வேதனையும் இருந்தது. உள்ளத்தில் பதற்றம் இருந்தது. அதனால் திரும்பிப் படுப்பது கூட கடினமாக இருந்தது. இரவில் எனக்கு கடுமையான துன்பம் ஏற்பட்டபோது எதிரிகள் இதனால் மகிழ்ச்சியடைந்து பரிகாசம் செய்து விடக் கூடாதே என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதுவும் கூட மார்க்கத்திற்காக மட்டுமே இருந்தது. வேறு எந்த விஷயத்திற்காகவும் அந்த எண்ணம் இருக்கவில்லை. அப்போது நான் இறைவன் முன்னிலையில் மரணம் கண்டிப்பாக நிகழக்கூடிய ஒன்றாகும். ஆனால், இத்தகைய மரணத்தினால் அதுவும் அகால மரணத்தினால் எதிரிகள் மகிழ்ச்சியடைவது இருக்கின்றது என்பதை நீ அறிந்திருக்கின்றாய் என்று துஆ செய்தேன். அப்போது எனக்கு சிறு மயக்கம் ஏற்பட்டு அத்துடன் اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ - اِنَّ اللّٰهَ لَا يُخْزِى الْمُؤْمِنِيْنَ அதாவது, இறைவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். மேலும், இறைவன் நம்பிக்கை கொண்டவர்களை இழிவுபடுத்த மாட்டான் என்ற இல்ஹாம் எனக்கு வந்தது. எனது உயிர் எவன் கையில் இருக்கின்றதோ அந்த கருணைமிக்க இறைவன் மீது நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான் அவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுகின்றேனா அல்லது உண்மையைக் கூறுகின்றேனா என்பதை இந்த நேரத்தில் கூட அவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். இந்த இல்ஹாம் வந்த பிறகு அரைமணி நேரத்திற்குள் எனக்கு தூக்கம் வந்து விட்டது என்று நான் நினைக்கின்றேன். பிறகு திடீரென்று கண்விழித்தபோது நோயின் பெயரும் அடையாளமும் இல்லாமல் போனதை நான் கண்டேன். எல்லா மக்களும் தூங்கிக் கொண்டிருந்தனர். நான் எழுந்தேன். சோதித்துப் பார்ப்பதற்காக நடக்க ஆரம்பித்தேன். நான் முற்றிலும் ஆரோக்கியமாக இருப்பது நிரூபணமாகி விட்டது. அப்போது எனக்கு எனது வல்லமைமிக்க இறைவனின் மகத்தான வல்லமையைப் பார்த்து அழுகை வந்தது. அதாவது, நமது இறைவன் எத்தகு வல்லமையுள்ள இறைவனாக இருக்கின்றான். அவனது வார்த்தையான திருக்குர்ஆனின் மீது நம்பிக்கை கொண்டு அவனது தூதரைப் பின்பற்றுகின்ற நாம் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றோம். அற்புதங்களை நிகழ்த்துகின்ற அந்த இறைவன் மீது நம்பிக்கை கொள்ளாத அம்மக்கள் எந்த அளவு துர்பாக்கியசாலிகளாக இருக்கின்றனர் ?

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 243-246)*

---

*(குத்பா தொடர்ச்சி...)*

ஆனந்தமும் கிடைக்க முடியாது. அடிப்படை இந்த விஷயத்தில்தான் இருக்கின்றது. எதுவரை தீய எண்ணங்களையும் அசுத்தமான திட்டங்களையும் மனிதன் எரித்து விட்டு, அவனிடமிருந்து 'தான்' என்ற அகந்தையும் தற்பெருமையும் விலகி தாழ்மைக் குணமும், 'தான்' ஒன்றுமே இல்லை என்று கருதும் நிலையும் உருவாகாதோ அதுவரை அவரை இறைவனின் உண்மையான அடியார் என்று கூற முடியாது. முழுமையான அடியாராக இருக்கின்ற நிலையைக் கற்றுத் தருகின்ற சிறந்த ஆசிரியனும் எல்லாவற்றையும் விட சிறந்த வழியும் தொழுகையே ஆகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: "நான் மீண்டும் உங்களிடம் கூறுகின்றேன். நீங்கள் இறைவனுடன் உண்மையான உறவையையும் உண்மையான தொடர்பையும் நிலைநாட்ட விரும்பினால் தொழுகையில் நிலைத்து நில்லுங்கள். எவ்வாறு நிலைத்து நிற்க வேண்டும் என்றால் உங்களது நாவும் உடலும் மட்டுமல்லாமல் உங்களது ஆன்மாவின் நாட்டங்கள் உணர்வுகள் ஆகிய அனைத்துமே தொழுகையாகவே ஆகி விட வேண்டும்." (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 169-170; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் நம் அனைவருக்கும் உண்மையான ஏகத்துவத்தில் நிலைத்திருப்பதற்கும், நமது தொழுகைகளை பாதுகாப்பதற்கும், இன்பம் நிறைந்த தொழுகைகளை தொழுவதற்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. அல்லாஹ் அல்லாதவற்றை நமது வணக்கத்திற்குரியவையாக ஆக்கிக் கொள்வதற்குப் பதிலாக எப்போதும் அல்லாஹ்வை நமது வணக்கத்திற்குரியவனாக ஆக்கிக் கொள்பவர்களாக நாம் இருப்போமாக. அன்ஸாருல்லாஹ்வின் இஜ்திமா எங்கு நடக்கின்றதோ அங்கு மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைத் தொழுவதற்கான ஏற்பாடு இல்லை என்று எனக்கு தெரிய வந்தது. ஏனென்றால், மாலையில் குறித்து நேரம் கழிந்த பிறகு அந்த இடத்தை நாம் விட வேண்டியது வரும். வேறு இடத்தில் அதாவது ஜமாஅத்தாக தொழுவதற்காக ஏற்பாடு செய்ய முடிகின்ற இடத்தில் இஜ்திமாவை நடத்த வேண்டும். வருங்காலத்தில் அன்ஸாருல்லாஹ் ஐவேளை தொழுகையையும் முறையாக தொழ வேண்டும். அல்லாஹ் அவர்களது இஜ்திமாவை வெற்றி பெறச் செய்வானாக. மேலும் அவர்களை உண்மையான முறையில் இறைவணக்கம் செய்பவர்களாக ஆக்குவானாக.

★ ★ ★ ★ ★

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad